வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams
North America
SINCE 1988

பனிமலர் அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை / டிசம்பர் 2023

உள்ளே...

குறுங்கதைப் போட்டி 15
தீக்குளித்தல் - கவிதை 17
நினைவில் நின்றவர்கள் 18
மலரும் மலர்களின் நாட்கள் 22
யாருமற்ற சிலுவை - கவிதை 28
பயணம் 22 -சிறுகதை 28
கம்பர் ஒரு கவிச்சித்தர் 37
வாரீர்! பேரவையின் 37 வது தமிழ் விழா 50
புதியதோர் உலகம் செய்வோம்! - கவிதை 51
நன்றி மறப்பது நன்றன்று!! 53

36 ஆவது பேரவை விழா
தன்னார்வலர்களுக்கான நன்றி நவிலல் விழா

அருவி மலர்க் குழு

இரம்யா ரவீந்திரன்
ஆசிரியர்
சார்லட், NC

ஷீலா ரமணன்
இணையாசிரியர்
சான் அன்டோனியா,TX

உமா ராம்குமார்
இணையாசிரியர்
நியூயார்க், NY

இந்து ராவ்
துணையாசிரியர்
நியூயார்க், NY

பிரதிபா பிரேம்குமார்
துணையாசிரியர்
அட்லாண்டா, GA

விஜயகுமார் தேவராஜ்
துணையாசிரியர்
நியூயார்க், NY

ஜேசு சுந்தரமாறன்
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

இளங்கோவன் சந்தானம்
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

செந்தில் முருகன் வேலுசாமி
துணையாசிரியர்
வாசிங்டன், D.C

இராம்துரை பாலசுப்ரமணியன்
துணையாசிரியர்
நோவி, MI

மீனா சுந்தர்
ஆலோசகர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

இளங்கோவன் தங்கவேலு
ஆலோசகர்
செயின்ட் லூயிஸ், MO

பேரவைத் தலைவர் மடல்

அமுதே தமிழே, அழகிய மொழியே.

சாதி, மதங்களைக் கடந்து, உழைப்பால் ஒன்றுபட்டு நிற்கும் தன்னார்வலர்களே, ஆலமரமாய் வளர்ந்து நிற்கும் பேரவையின் ஆணிவேர்கள். முதலில், உங்களுக்கு என் வணக்கம். வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் உறுப்பினர் சங்கத்தின் அங்கத்தினர்க்கும் என் வணக்கம். பேரவையின் பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், மற்றும் கொடையாளர்களுடன் அருவி இதழ் வாயிலாக மீண்டும் உரையாடுவதில் மகிழ்ச்சி. அனைவரும் உங்கள் உற்றார் உறவினருடன் நன்றி நவிலல் நாளினைச் சிறப்பாகக் கொண்டாடி இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

டெக்சாசு மாகாணத்தின் சான் ஆண்டோனியோ மாநகரில் பேரவையின் 37-ஆவது ஆண்டு விழா நடக்க இருப்பது அனைவரும் அறிந்ததே. இவ்விழா, “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” மற்றும் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று உலகிற்கு எடுத்துரைத்த பழந்தமிழரின் இற்றைக்கால அறை கூவலாக “சமத்துவம் தமிழர்களின் தனித்துவம்” என்ற கருப்பொருளில் கொண்டாடப்படும். தமிழரின் தனித்தன்மையை மீண்டும் மீண்டும் எழுதவும், சொல்லவும் வாய்ப்பு நல்கிய சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்திற்கு என் நன்றி. நீங்கள் அனைவரும் விழாவிற்கு வர வேண்டும், சான் ஆண்டோனியோ விழா ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சில வாரங்களுக்கு முன், டெக்சாசு மாகாணத்தில், தமிழர்கள் நடத்திவந்த ஒரு முதலீட்டு நிறுவனத்தை முடக்கும் நடவடிக்கைக்கு அனுமதி பெற்றுள்ளதாக அமெரிக்காவின் செக்யூரிட்டிஸ் & எக்ஸ்சேஞ்ச் கமிஷன் (எஸ்இசி) அமெரிக்காவில் உள்ள நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாகச் செய்தி வந்தது. செய்தி பரவிய சில நாட்களிலேயே அவர்கள் தங்களது முதலீட்டாளர்களுக்கு விளக்கம் அளித்து ஒரு மடல் அனுப்பியதாக அறிகிறோம். பேராளர்களுக்கு ஏற்கனவே கடிதம் மூலம் தெரிவித்திருந்தபடி, பேரவை அந்நிறுவனத்தில் செய்திருந்த முதலீட்டினை இந்நிகழ்விற்குப் பல மாதங்களுக்கு முன்பே திரும்பப் பெற்றுவிட்டதால் பேரவைக்கு எவ்விதமான நிதிச்சிக்கலும் இதன் மூலம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்நிறுவன உரிமையாளர்கள் அமெரிக்காவில் உள்ள பற்பல தமிழ்ச் சங்கங்களுக்கும் பேரவைக்கும் மற்றும் பல தமிழ் வணிக அமைப்புகளுக்கும் சில ஆண்டுகளாகவே கொடை அளித்து உதவி வந்திருக்கின்றனர். கொடையுள்ளம் படைத்த தமிழர்கள் திறனறிந்து தீதின்றி பெரும் பொருளீட்டி வணிகவுலகில் வெற்றி பெற்றால் தமிழ்ச் சமூகத்திற்குத் தானே நல்லது. அதைப் பார்த்து இளையோரும் ஊக்கமடைவார்கள் அல்லவா! பொறுத்திருந்து பார்ப்போம். இச் செய்தி, தமிழர்கள் முதலீட்டுப் பரப்பில் முன்னேறி வருகிறார்கள் என்று எதிர்பார்த்திருந்த பலருக்கும் பெரும் ஏமாற்றம் அளிக்கும் செய்தி தானே!

இந்திய ஒன்றியத்தின் மணிப்பூர் மாநிலத்தில் நடக்கும் வன்முறை மற்றும் இன அழிப்பு இன்னும்

ஓயாத வேளையில் காசாவில் இசுரேல் நடத்திவரும் இராணுவ நடவடிக்கையினால் பல்லாயிரம் குழந்தைகள் உள்ளிட்ட சாமான்ய மக்கள் பலரும் கொல்லப்பட்டும் சொல்லெனா இன்னல்களுக்கும் ஆளாகியிருப்பதும் பெரும் துயரத்தை அளிக்கிறது. இவ்விரண்டு வன்முறைகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்பதே நமது வேண்டுகோள்.

விடுதலை இந்தியாவில் தொடக்கக்கல்விக்கான மிக வலிமையான அடித்தளத்தைத் தமிழ்நாட்டில் அமைத்த முன்னோடி முதல்வர், பெருந்தலைவர் காமராசரின் மதிய உணவுத் திட்டம் தொடங்கி சமத்துவத்தை அனைத்து வழிகளிலும் பரப்பிட ஆவன செய்துவரும் இன்றைய முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் காலை உணவுத் திட்டம் வரை, எல்லோரும் கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் கல்விப்புரட்சியை உருவாக்கி வந்திருக்கின்றன. இதைக் கொச்சப்படுத்தும் நோக்கில் மனுவின் சனாதன கண்ணோட்டத்துடன் ஒரு நாளிதழ் “செய்தி” வெளியிட்டுப்பதை வன்மையாகக் கண்டித்து கடிதம் எழுதியிருந்தேன். தமிழ்நாட்டின் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் ஆண்கள் மட்டுமே பயின்று பயிற்சி பெற்று வந்தது போய் தற்போது மூன்று பெண்கள் அர்ச்சகர் பயிற்சி பெற்று சான்றிதழ்களுடன் அர்ச்சகர்களாக உருவெடுத்து வரும் இந்நாளில் இப்படி ஒரு வன்மத்தைக் கொட்டியுள்ளது அருவருக்கத்தக்கது.

உலக அரங்கில் தமிழர்கள் உயர்ந்து வருகிறார்கள் என்ற செய்தியினை உங்களுடன் பகிர்வதில் பெருமை அடைகிறேன். ஆம்! ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட திருமிகு தருமன் அவர்கள் சிங்கப்பூர் நாட்டின் ஒன்பதாவது அதிபராக தலைவராகப் பெருவாரியான வாக்குகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்து. 2023 சதுரங்க உலகக் கோப்பைக்கான போட்டியில், திருமிகு இர. பிரக்ஞானந்தா தரவரிசையில் இரண்டாவதாக உள்ள பபியானோ கருவானாவை அரையிறுதியில் தோற்கடித்து, தனது 18-ஆவது அகவையில் சதுரங்க உலகக் கோப்பை இறுதிச் சுற்றிற்குத் தகுதி பெற்றார். இறுதிச் சுற்றை அடைந்த இளைய தமிழ் வீரர் மற்றும் இளைய இந்தியர் என்ற பெருமை நியூயார்க்கில் நடைபெற்ற 35-ஆவது பேரவை விழாவிற்கு வந்து சிறப்பித்த பிரக்ஞானந்தா அவர்களுக்கு மட்டுமே உண்டு! விளையாட்டுகளைப் பற்றி பேசும்பொழுது இணை ஒலிம்பிக் விளையாட்டுகளில் உயரம் தாண்டுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித்தந்துள்ள திருமிகு. தங்கவேலு அவர்களையும் நினைவு கொள்ள வேண்டும்.

உணவுத் தேவைக்காக உலக நாடுகளின் உதவியை எதிர்நோக்கியிருந்த இந்தியாவை உணவுத் தன்னிறைவு அடைய வைத்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மறைவு தமிழ்நாட்டிற்கும் உலகத்திற்கும் பேரிழப்பு. "வீரத்தியாகியின் நினைவு, நமக்கு உள்ளத் தூய்மையை, உறுதியை, தியாக சுபாவத்தைத் தருவதாக அமைதல் வேண்டும். தியாகிக்குத் தலைவணங்குவோம்! தாயகத்துக்குப் பணிபுரிவோம்!" என்றார் பேரறிஞர் அண்ணா. அவர் அவ்வாறு சொன்னது தமிழ்நாடு எனப்பெயரிடக் கோரித் தனது இன்னுயிரை ஈந்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களின் நினைவாக. சில நாட்களுக்கு முன் மறைந்த விடுதலைப் போராட்ட வீரர் தியாகச் செம்மல் ந. சங்கரய்யா அவர்களுக்கே அஃது ஒப்பும். மதுரை கிழக்குத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக ஐயா அவர்கள் இருந்தபொழுது, இரண்டு முறை அவரைச் சந்தித்திருக்கிறேன். பத்தாவது படித்துக் கொண்டிருந்த எனக்கு அவர், கல்வியில் முதன்மையானது தொடர்புத் திறன், அதனை வளர்த்துக்கொள் என்று அறிவுறித்தினார். அதற்காக “பாடப்பொருளை உணர்ந்து படித்து உள்ளத்தில் உண்மையோடு இருந்தால், எதையும் எங்கும் சொல்லலாம், யாரிடமும் பேசலாம்” என்று அவர் கூறியதாக என் தந்தை அடிக்கடி சொல்லியிருக்கிறார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாடு அரசின் 'தகைசால் தமிழர்' விருது, முதல் முறையாக திருமிகு. சங்கரய்யாவுக்கு வழங்கப்பட்டது பலருக்கும் நினைவிருக்கலாம். மக்களுக்காக உழைத்த போராளிகளுக்கு விருது பெரிதல்ல. திருமிகு சங்கரய்யாவிற்கு மதுரை பல்கலைக்கழகத்தால் தமிழ்நாடு அரசு மதிப்புறு முனைவர் பட்டம் கடந்த சூலை மாதம் வழங்க இருந்தது. அதற்கு அனுமதி வழங்காமல் அரசியல் செய்தார் தமிழ்நாடு ஆளுநர் திரு ஆர். என். இரவி. இந்தியாவின் 12 ஆவது

ஆணையத்திடமிருந்து நிதிவரவு குறைந்ததால் கடந்த 19 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு உரூபாய் 85 ஆயிரம் கோடி இழப்பு என்றும், இனி ஆண்டுக்கு உரூபாய் 10 ஆயிரம் கோடி தமிழ்நாட்டிற்கு இழப்பு ஏற்படும் என்றும், ஆளுநர் மாளிகையை வைத்து தமிழர்களை முடங்குகின்றனர் என்றும் தமிழ்நாட்டு முதல்வர் கூறியிருப்பதை இங்கு நினைவுகொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற மாண்புகளுக்கும், அரசியலமைப்பிற்கும் எதிராகச் செயல்படும் ஆளுநர், தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் பற்றியும் அறியாமல் இருப்பது வேதனை அளிக்கிறது. இப்படியான மாநில அரசுகளுக்கு எதிரான போக்கை ஆளுநர் அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றியத்தில் ஆள்வோர் திட்டங்களில் இந்தி, சமற்கிருத, ஆங்கிலப் பெயர்களைச் சூட்டுகின்றனர். ஒன்றிய அரசின் திட்டப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தி தமிழ்நாட்டில் பயன்படுத்த வேண்டாமா? “போஷாக் அபியான், கலா உத்ஸவ், நிபுண் பாரத் திட்டம், வீர் கதா” - இவையெல்லாம் என்ன தெரியுமா? தமிழ்நாட்டுப் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் சில திட்டங்களின் பெயர்கள் என்று இலக்குவனார் திருவள்ளுவன் ஐயா வருந்தி பேசியுள்ளார். தமிழை ஒதுக்கிவிட்டு, இந்தி முதலான பிற மொழிகளைக் கற்பிக்கும் பள்ளிகளுக்குத் தமிழக அரசு இசைவு தருவதைக் குறைக்க வேண்டும். தமிழ்நாடும் பிரான்சியத்தைப் போல பிறமொழி சொற்கள் மற்றும் சொலவடைகள் வேறூன்றுமுன் உடனுக்குடன் அவற்றைத் தமிழ்ப்படுத்தி வெளியிட வேண்டும். தமிழ்வளர்ச்சித் துறை மூலம் இதனை செயலாக்குவது சிறப்பாக இருக்கும்.

மலையகத் தமிழ் உறவுகள் பிரித்தானியர்களால் இந்தியாவில் இருந்து இலங்கைக்குத் தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்டு இரண்டு நூற்றாண்டுகள் நிறைவடைகின்றன. இந்த இருநூறு ஆண்டுகளில் அவர்களின் வாழ்வாதாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. அவர்களின் தமிழ்ப் பள்ளிகளும் வசதிகள் இல்லாமல் காணப்படுவதால் தமிழ் மாணவர்கள் சிங்கள பாடசாலைகளில் சிங்கள மொழிக்கல்வியைத் தொடர்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றார்கள். இந் நிலையை மாற்றி பொருந்தாச் சூழலில் வாழும் மலையகத் தமிழ் உறவுகளின் கல்விக்குக் கரம் கொடுக்கும் நோக்குடன் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்க பேரவை கனேடிய தமிழ்ப் பேரவையுடன் இணைந்து நிதி திரட்டல் நிகழ்ச்சி நடத்தியது. அதில் கலந்துகொண்டு மனம் உவந்து அள்ளிக் கொடுத்த நல்ல உள்ளங்களுக்கும், ஆர்வர்டு தமிழ் இருக்கைக் குழுவினர், அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகம், மற்றும் “இலண்டன்-2-நியூயார்க்” தொழில் முனைவோர் குழுவினர்க்கும் என் நன்றி.

தமிழ்ச் சொந்தங்களே! அடுத்த ஆண்டு சூலை 4, 5, 6 திகதிகளில் டெக்சாசு மாகாணத்தின் சான் ஆண்டோனியோ மாநகரில் நடக்கும் 37-ஆவது பேரவை விழாவில் உங்கள் அனைவரையும் மீண்டும் சந்திக்க ஆவலுடன் இருக்கிறேன். இவ்விழாவின் முன்னோட்டமாக தாயகத்தில் நடக்கும் தொழில் முனைவோர் மாநாடு இம்முறை ஈழத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வரும் சனவரித் திங்களில் நடக்க இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க வளமுடன், நும்வாழ்வை ஆள்க அறமுடன்.

அன்புடன்

முனைவர் திரு. பாலா சுவாமிநாதன்

நியூயார்க்

செயலாளர் கடிதம்

தன்னார்வலர்களுக்கும் தமிழ் உறவுகளுக்கும் வணக்கம்!

தெளிந்த நீரால் சூழப்பட்ட இவ்வுலக நிலப்பரப்பை பிறவேந்தர்க்கு உரிமையின்றித் தமக்கே உரியதாகக் கொண்டு ஆட்சி செய்யும் பெருவேந்தர்கள் உள்ளனர். நள்ளிரவிலும், கடும்பகலிலும் தூங்காமல் விலங்குகளைப் பாதுகாக்கும் கல்வியறிவற்ற நிரை மேய்ப்பவரும் உள்ளனர். இவ்விரு வகை மனிதரும் உண்ணும் உணவு ஒரு நாழி அளவு ஆகும். உடுத்தும் உடைகளும் மேல், கீழ் என இரண்டேயாகும். எனவே செல்வத்தால் பெறும் பயனாவது பிறர்க்கு ஈதலேயாகும். அச்செல்வத்தை ‘நாமே அனுபவிப்போம்’ என்று ஒருவர் கருதினால், அவரால் அனுபவிக்க முடியாதவாறு தவறும்.

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

- மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

நம் ஒவ்வொருவருக்கும் நம் வாழ்வில் கொடுக்கப்பட்டுள்ள ஈடு இணையற்ற செல்வமானது நம்மிடம் உள்ள நேரம். இந்த நேரத்தின் பயன் சிறப்பான பணிகளுக்குக் கொடுத்தலே! அந்த நேரத்தை பேரவை உள்ளிட்ட அனைத்து தமிழ் அமைப்புகளும் சிறப்பாகச் செயல்பட பயன்படுத்தும் தன்னார்வலர்கள் ஒவ்வொருவரும் அமைப்புகளின் வேர்கள். உங்கள் அனைவரின் பங்கேற்பினால் வட அமெரிக்காவில் பல்வேறு தமிழ் அமைப்புகள் சிறப்பாகத் தமிழ்ப்பணிகளையும், சமூகப்பணிகளையும் செய்ய முடிகிறது. உங்கள் தன்னார்வப்பணியே நீங்கள் விதைக்கும் விதை.

நம்மில் பலருக்கு நமது பள்ளிப்பருவத்திலும் இளமைப்பருவத்திலும் பொருள்பொதிந்த தமிழ்பணி செய்ய சரியான தளங்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆயினும், ஆண்டுகள் பல கழிந்து அயல்நாடு வந்தபிறகு தமிழ்ச் சங்கங்கள் வழியாக பல்வேறு தமிழ்ப்பணிகளில்

ஈடுபட வாய்ப்பு கிட்டியுள்ளது. தமிழ் அமைப்புகளில் பணி செய்யவரும் தன்னார்வலர்கள் பல ஆண்டுகளாக தன்னுள் ஊறிக்கிடந்த தமிழ் மற்றும் தமிழ்ச் சமூக ஆர்வத்தை உந்துகோலாகக் கொண்டு, பல்வேறு சிறப்பான எண்ணங்களுடன் தமிழ் அமைப்புகளை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல முனைந்து வருகின்றனர். அவ்வாறு வருவோருக்கு ஏற்ற சூழலை தமிழ் அமைப்புகள் உருவாக்க முனைதல் நலம். அது தன்னார்வலர்களை ஊக்கப்படுத்தும்; செய்ய முனைந்த பணிகளை மேலும் சிறப்பாகச் செய்திட வழிவகுக்கும். இதுவே தமிழ் அமைப்புகள் மேம்படவும் காலம் கடந்து நிலை நிற்கவும் உதவும். இதனை அனைத்து தமிழ் அமைப்புகளும் சிந்தித்து ஆவண செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி மூங்கில் போல் சூழ்ந்து முடிவின்றி வளர்ந்து வரும் பேரவையில் ஏறத்தாழ 55 தமிழ் அமைப்புகள் உறுப்பினராக உள்ளனர். மேலும் பல அமைப்புகள் உறுப்பினராக முன்வருகின்றனர். இந்த அனைத்து அமைப்புகளுக்கும் பேரவையின் மனமார்ந்த நன்றிகள். ஒற்றுமையே வலிமை; அவ்வலிமையை தமிழ் பல நூற்றாண்டுகளுக்கு நீடித்து நிலைக்க உரமாக்குவோம். தமிழ் அமைப்புகளுக்குப் பேரவை பல்வேறு வகைகளில் உதவக் காத்திருக்கிறது. உங்களுக்கு எத்தகைய உதவி தேவைப்பட்டாலும், உடனே பேரவையைத் தொடர்பு கொள்ளவும். உங்களுக்கான உதவியைச் செய்யவும் அல்லது சரியான வழிவகையை தெரியப்படுத்தவும் அணியமாக உள்ளோம். உங்கள் தேவைகளை secretary@fetna.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

பேரவையின் 37ஆம் தமிழ் விழா டெக்ஸ்சஸ் மாகாணத்தின் சான் ஆண்டோனியோ நகரில் 2024ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 4, 5 மற்றும் 6ஆம் நாட்களில் (வியாழன், வெள்ளி மற்றும் சனி) நடைபெற உள்ளது. இவ்விழாவிற்குத் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம். இவ்விழாவினைச் சிறப்பாக ஒருங்கிணைத்து வரும் சான் ஆன்டோனியோ தமிழ்ச்சங்கத்தின் தன்னார்வலர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். இச்செய்தியை உங்கள் தமிழ் அமைப்புகளின் வழியாக ஒவ்வொரு தமிழ் மக்களிடமும் கொண்டு சேர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், சிறப்பு வாய்ந்த “சங்கங்களின் சங்கமம்” நிகழ்வில் உங்கள் தமிழ் அமைப்பின் பங்கேற்பும் இருக்கும் வண்ணம், உங்கள் பயணத்திட்டங்களை இப்போதே மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். வழக்கம் போல் பல்வேறு தமிழ் நிகழ்வுகள், மாணவர் போட்டிகள், கலை நிகழ்வுகள் என எண்ணற்ற சிறப்பான திட்டமிடல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. உங்கள் பங்களிப்பும் பங்கேற்பும் இவ்விழாவினை மேலும் சிறப்பிக்கும்.

பேரவை, தொடர்ந்து பல்வேறு சிறப்புக் குழுக்களின் வாயிலாக அருபெரும் தமிழ்ப் பணிகளையும் தமிழர் நலப்பணிகளையும் செய்துவருவது அனைவரும் அறிந்ததே. குறிப்பாக, கடந்த ஆண்டில் “தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்புக் குழு”வின் வழியாக முன்னோடி எழுத்தாளர்கள் தேர்வு செய்த 13 தமிழ்ச் சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிவர உள்ளன. தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் சிறந்த தமிழ் எழுத்துகள் உலகளாவிய மக்களைச் சென்று சேரவும் மேற்கொள்ளப்பட்ட இந்த அரும்பணி சிறப்பாக உருப்பெற்று ஒரு நூலாக வெளிவருவதில் பேரவை பெருமை கொள்கிறது. இந்நூலை அமெரிக்கா மற்றும் கனடாவின் பல்வேறு நகரங்களில் உள்ள நூலகங்களுக்கு வழங்க வழிவகை செய்யப்படும். மேலும் இந்நூல், எதிர்வரும் பேரவை விழாவில் உங்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறாம்.

பேரவையின் ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் நலக்குழுவின் வழியாக தமிழ்நாடு மற்றும் இலங்கையில் உள்ள பல்வேறு மக்களின் வாழ்வியல் தேவைகளுக்குத்

தொடர்ந்து நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அன்றாட வாழ்வின் தேவைகளுக்கே பொருளின்றி, பணியின்றி, உரிய கருவியின்றி, தேவையான கட்டடம் இன்றி கடினமான சூழலில் வாழும் பல்வேறு மக்களுக்கு பேரவை கடந்த ஆண்டுகளில் செய்துள்ள $60,000 வெள்ளிகள் நிதி உதவி அளப்பரியது. மேலும், மலையகத் தமிழர்களுக்கான நிதிதிரட்டல் நிகழ்விற்கு ஒத்துழைத்தது இக்குழு. இத்தகைய சிறப்பானப் பணிகளை மேற்கொள்ளும் பேரவையின் ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் நலக்குழுவிற்கு பேரவையின் மனமார்ந்த நன்றிகள்.

ஈழத்தமிழர் விழிப்புணர்வும் மேம்பாடும் என்ற குழுவின் வழியாக நமது தொப்புள்கொடி உறவுகளுக்குத் தேவையான பல்வேறு நலப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தமிழ் ஈழத்தில் தமிழின அழிப்பு மற்றும் ஈழத்தமிழர்களின் தேவை குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள் இக்குழுவால் ஒருங்கிணைக்கப்பட்டன. இக்குழுவிற்கு பேரவையின் மனமார்ந்த நன்றிகள். இவ்வாறு பேரவையின் பல்வேறு புதிய குழுக்கள் சிறப்பாக தமிழ் மற்றும் தமிழர் நலப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. நீங்களும் இக்குழுக்களில் பணியாற்றி உங்களால் இயன்ற உதவியை செய்ய அழைக்கிறோம்.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

எப்பொருள் எத்தன்மையதாய்த் தோன்றினாலும், அத்தோற்றத்தை மட்டும் கண்டு மயங்காமல், அப்பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வு.

அத்தகைய மெய்யுணர்வோடு நாளொரு நற்பணி, பொழுதொரு பொதுநலம் என்று நாம் அனைவரும் சிந்தித்து செயல்பட்டு, தமிழையும், தமிழர் நலனையும் முன்னிறுத்தி தமிழ் அமைப்புகளைச் சிறப்பாக வழிநடத்திச் செல்வோம். தமிழ் தரணியெங்கும் தழைக்கும்; தமிழர் தரணியெங்கும் தழைப்பர்.

திரு. கிங்ஸ்லி சாமுவேல்

நோவி, மிச்சிகன்

ஆசிரியர் கடிதம்

அனைவருக்கும் வணக்கம்!!

அருவி பனிமலர் இதழில் உங்களை மீண்டும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. அனைவருக்கும் எதிர்வரும் 2024 ஆண்டுக்கான புத்தாண்டு வாழ்த்துகள் மற்றும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள். இப்புதிய ஆண்டு உங்கள் அனைவருக்கும் நிறைந்த மகிழ்ச்சியையும், புதிய நம்பிக்கையையும், புதிய உறவுகள், நட்புகள் ஆகியவற்றை கொண்டு வந்து சேர்க்கும் ஆண்டாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். உலகில் நிலவும் பல்வேறு வன்முறைகள், போர்கள், சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்கள், செயற்கை நுண்ணறிவின் அதிவேக வளர்ச்சி என மனித குலத்தின் முன்னிருக்கும் அறைகூவல்கள் பல. காசாவில் நடைபெறும் போர் முதல் உக்ரைனில் நடைபெரும் போர் வரை தினமும் நமது செய்தி அலைகளில் வந்து விழும் எதிர்மறைச் செய்திகள் பற்பல. இது போன்ற நெருக்கடிச் சூழல்கள், மனித இனம் தொடங்கிய காலம் தொட்டே, ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் மாறி மாறி வந்துகொண்டே இருந்திருக்க வேண்டும். நெருக்கடியானச் சூழல்களை எதிர்கொள்ள வேண்டிய நேரங்களில் வீரம் என்பது மனிதனுக்கு எங்கிருந்து பிறக்கிறது என்ற கேள்வி தோன்றுகிறது.

விண்ணை இடிக்கும் தலை இமயம்-எனும்

வெற்பை அடக்கும் திறலுடையார்- சமர்

பண்ணிக் கலிங்கத்து இருள் கெடுத்தார்- தமிழ்ப்

பார்த்திவர் நின்ற தமிழ்நாடு

என்று தமிழர்களின் வீர மரபை போற்றிப் பாடியிருக்கிறார் மகாகவி பாரதியார். ஆனால் ஒரு மன்னன் வீரத்துடன் ஒரு நாட்டைப் பிடிக்கிறான் என்றால் அவனுக்காகப் போரில் ஆயிரக்கணக்கானோர் மடிய வேண்டும். அவனுடைய படை வீரர்கள் அண்டை நாட்டில் உள்ளவர்களைச் சிறைப்படுத்த வேண்டும் என்றால் இது தான் வீரமா என்ற கேள்வியும் எழுகிறது. ஒருவன் நம்மைத் தாக்க வேண்டும் என்று நினைத்தால் அதை எதிர்க்காமல் என்ன நடந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்று துணிவதும், தீங்கு இழைக்கும் மனிதர் இன்னதென அறியாமல் தவறு செய்கிறார் என்ற புரிதலைக் கொள்வதும் மிகவும் பெரியது. எத்தனை கடுமையான அடக்குமுறையும் அத்தகைய வீரத்தின் முன் தோற்றுவிடும். இத்தகைய வீரமே அகிம்சை என்று அழைக்கப்படுகிறது. அகிம்சை என்பது செயல்படாத நிலை அல்ல. உச்சபட்ச வீரத்தையும், செயல்பாட்டையும் கொண்டது தான் அகிம்சை.

வன்முறையை நெஞ்சுரத்தால் எதிர் கொள்ளும் போது அந்த வன்முறை தோற்றுப் போகும். அகிம்சையும், வாய்மையும் மலைகளைப் போல மிகவும் தொன்மையானவை. அகிம்சை என்பது மிக மிக மெதுவானதாக இருக்கலாம். உடனடியாக விளைவுகளை ஏற்படுத்தாத ஒன்றாகக் கூட இருக்கலாம். ஆனால் நாசத்தை, பேரழிவை, நீடித்த அழிவைத் தடுக்கும் சக்தி கொண்டது அகிம்சை

மட்டுமே. வன்முறை ஒரு சிலரை மட்டும் வீரர்கள் ஆக்குகிறது. ஆனால் அகிம்சையோ அதைப் பின்பற்றும் அனைவரையும் வீரர்கள் ஆக்குகிறது. அகிம்சை மட்டுமே வன்முறையை உள்வாங்கிக் கொண்டு அதை ஆக்கப்பூர்வமான மாற்று திசையில் செலுத்தும் வலிமையுடையது.

அகிம்சையை பின்பற்ற தேவையானது எதுவென்றால் எந்த பலவீனமும் இல்லாத வாழ்க்கை முறை, தேவைகளைக் குறைத்துக் கொள்கிற வாழ்வியல், வலிகளைச் சுமக்கும் உள்ளம் ஆகிய இந்த மூன்று குணங்களும் தான். ஒரு புதிய திறப்பை நோக்கிய மானிடத்தைச் செலுத்த, மனிதர்கள் விரும்பும் அமைதியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும், தனி மனித பாதுகாப்பும் ஏற்பட அகிம்சை மட்டுமே சிறந்த வழி. அத்தகைய சிறந்த பாதையில் மனித குலம் நடைபோடும் ஆண்டாக வரும் ஆண்டு அமையட்டும்

37 ஆவது பேரவை விழா வரும் ஜூலை 2024 ஆம் ஆண்டு சான் ஆண்டோனியோவில் நடைபெற இருக்கிறது. இதன் ஒரு அங்கமான FiTEN தொழில் முனைவோர் மாநாடு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற இருக்கிறது. இதற்கானச் சுற்றோலை இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. இது தவிர ஆண்டுதோறும் பேரவை நடத்தும் தமிழிசை விழாவும் 2023 திசம்பர் மாதம் 29-ஆம் தேதியன்று சென்னையில் நடைபெற இருக்கிறது. இதற்கான சுற்றோலையையும் இவ்விதழில் காணலாம். அருவி இதழ் தற்சமயம் ஒரு குறுங்கதைப் போட்டியை நடத்தி வருகிறது. திசம்பர் 20, 2023 வரை இந்தக் குறுங்கதைப் போட்டி நடக்க உள்ளது. வட அமெரிக்காவில் உள்ள அனைவரும் இந்தப் போட்டியில் பங்கு பெறலாம். போட்டியின் விதிகளை இந்த அருவி இதழில் இணைக்கப்பட்டுள்ள சுற்றோலையில் காணலாம்.

அருவி இதழில் முதன் முறையாக எழுத்தாளர் அம்பை அவர்கள் எழுதிய சிறுகதை ஒன்றினை வாசகர்கள் அறியத் தந்துள்ளோம். இக் கதை அவருடைய “சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை” என்ற தொகுதியில் இடம் பெற்றுள்ளது. எழுத்தாளர் அம்பை அவர்களுக்கு அருவி குழுவினர் சார்பாக நன்றிகள்.

இவ்விதழுக்காக, இரண்டு ஓவியர்கள் தங்கள் படைப்புகளை அளித்திருக்கிறார்கள். முன் அட்டை ஓவியத்தை அளித்த ஓவியர் திருமிகு கிருத்திகா ஜோ அவர்களுக்கும் பின்னட்டை ஓவியத்தை அளித்த திருமிகு மகாலட்சுமி இரமணி அவர்களுக்கும் மிக்க நன்றி. 36-ஆவது பேரவை விழாவில் பணியாற்றிய தன்னார்வலர்களுக்கான பாராட்டு விழா சாக்ரமெண்டோவில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி பற்றிய புகைப்படத் தொகுப்பும், கட்டுரையும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது. முதன் முறையாக எழுத்தாளர் திரு. இலட்சுமி சரவணகுமார் அவர்கள் எழுதிய பயண அனுபவக் கட்டுரையையும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது. அருவிக்காக படைப்பு அனுப்பிய எழுத்தாளர் திரு. இலட்சுமி சரவணகுமார் அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகள்.

அருவி இதழுக்காக, சிறப்பான கவிதை ஒன்றை அனுப்பிய கவிஞர் மனுஷ்யபுத்திரன் அவர்களுக்கும் அருவி குழுவின் இதயங்கனிந்த நன்றிகள்.

தொடர்ச்சியாகச் சிறந்த படைப்புகளை அனைவருக்கும் அளிக்க உழைத்து வரும் அருவி குழுவில் உள்ள அனைவருக்கும் மிக்க நன்றி. இதைப் போலவே தங்கள் தமிழ்ச்சங்க நிகழ்வுகளைப் பகிர்ந்து, பிற தமிழ்ச் சங்கங்களுக்கும் இது போன்ற நிகழ்வுகளை நடத்த வேண்டும் என்ற செயலூக்கத்தை அளித்து வரும் தமிழ்ச்சங்கப் பொறுப்பாளர்களுக்கும் மிக்க நன்றி.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம், அருவி குறித்த பின்னூட்டங்களை aruvimalar @fetna.org என்ற மின்னஞ்சல் முகவரியில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றி

இரம்யா ரவீந்திரன்

சார்லட், வட காரோலைனா

கென்டக்கி தமிழ்ச் சங்கம்

கென்டக்கி தமிழ்ச்சங்கத்தின் வருடாந்தர சுற்றுலா ஆகஸ்ட் 20, 2023 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்வு கூட்டாஞ்சோறு மற்றும் விளையாட்டுப் போட்டிகளுடன் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.லூயிவில் தமிழ்ப் பள்ளி செப்டம்பர் 13, 2023 அன்று கென்டக்கியின் இந்து கோவிலில் மீண்டும் திறக்கப்பட்டது. இந்தக் கல்வியாண்டில் குழந்தைகள் மினசோட்டா தமிழ்ப் பள்ளி (MNTS) பாடத்திட்டத்தை பின்பற்றுகின்றனர். குழந்தைகள் தமிழ் கற்க உற்சாகத்துடன் பள்ளிக்கு வருகின்றனர்.

சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்

சான் ஆண்டோனியோவில் ஒவ்வொரு வருடமும் இந்தியா வின் அனைத்து மாநிலத்தவருக்கு இடையேயான கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவது வழக்கம் அதற்கு சில வருடங்களாக சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம் நன்கொடை அளித்து நடத்தி வருகிறது.



அவ்வாறே இவ்வருடப் போட்டிகளில் சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம் வெற்றி பெற்று கோப்பையை வென்றது குறிப்பிடத்தக்கது! இதற்காக உழைத்த தமிழ்ச் சங்க உறுப்பினர் களுக்கும், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தை பெற்றோருக்கும் பரிசுக் கோப்பைகள் வழங்கப்பட்டது. மேலும் கோடை விடுமுறையில் நடந்த அனைத்து விளையாட்டுப் போட்டிகளின் வெற்றியாளர் களுக்கும் கோப்பைகள் வழங்கப்பட்டன. சான் ஆண்டோனியோ அடுத்த நிகழ்வாக சுற்றுலா ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது . நம் ஊரின் நினைவு களைக் கொண்டு வரும் முகமாக, டீக்கடை, சர்பத் கடை, பஜ்ஜி, வடை, கரும்பு ஜூஸ், கூழ், குச்சி ஐஸ் எனப் பலவிதமான சிற்றுண்டிகளுடனும், கிராமத்து விளையாட்டுகளுடனும் அட்டகாசமாகக் கொண்டாடினோம். அன்று ‘காந்தி கணக்கு’ பி18 ’ஸ்டாண்டப் காமெடி’ குழுவினர் வந்து சிறப்பித்தனர்.

மேலும் தமிழ்ச்சங்க இளைஞர் அணி, சிட்டி கவுன்சில் டிஸ்ட்ரிக்ட் நடத்திய விழாவில் இணைந்து இசைக் கச்சேரி நடத்தி சிறப்பித்தது பாராட்டுக்குரியது.

அடுத்து நவம்பரில் சங்கத்தின் மொழியியல் குழு எடுத்து நடத்தும் ஒரு குறளுக்கு ஒரு டாலர்-’திருக்குறள் முதலாம் கட்ட’ போட்டிகளுக்கு குழந்தைகள் தயாராகி வருகின்றனர். இதனை அடுத்து ’தீபாவளி’ சிறப்பு நிகழ்ச்சி கோலாகலமாக நடக்க இருக்கிறது. அதன் பதிவை அடுத்த மலரில் காணலாம்!

ஒட்டாவா தமிழ் ஒன்றியம்

தியாகி திலீபன் உண்ணா நோன்பிருந்த புரட்டாசி மாதத்தில் கனடாவில் உள்ள தமிழ் அமைப்புகள் இணைந்து அவரின் தியாகத்தை நினைவு கூறும் முகமாக கடந்த நான்கு ஆண்டுகளாக உலர் உணவு நன்கொடையை முன்னெடுத்து வருகிறது. சேகரிக்கும் உணவு ஒவ்வோர் இடத்திலும் உள்ள உணவு வங்கிக்கு வழங்கப்படுகிறது. இவ்வருடம் ஒட்டாவா உணவு வங்கிக்கு ஒட்டாவா தமிழ் ஒன்றியம் மற்றும் சக தமிழ் அமைப்புகளும் இணைந்து ஆயிரம் இராத்தல் உணவுப் பொருள்களை வழங்கினர். ஒட்டாவா தமிழ் ஒன்றியத்தின் வருடாந்திர மக்கள் சந்திப்பும் ஐப்பசி மாதத்தில் இடம்பெற்றது.

தியாகி திலீபன் தமிழீழ வரலாற்றில் சிறிலங்காவின் தமிழின அழிப்பை எதிர்த்து போராடிய மதிப்பு மிக்க போராளி. 1987 இல் தமிழீழத்தில் நிலை கொண்டிருந்த இந்திய அரசிடம் சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பை நிறுத்தி பள்ளிகளில் இருந்து சிங்கள இராணுவத்தை அகற்றுவது உள்பட ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து செப்டம்பர் 15, 1987 அன்று உண்ணா நோன்பை ஆரம்பித்தார். கோரிக்கையை இந்திய அரசு ஏற்காமையால் செப்டம்பர் 26, 1987 அன்று நல்லூரில் தமிழர்கள் கதறி அழுமாறு இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அவரின் தியாகத்தை நினைவுகூற அவர் உண்ணா நோன்பிருந்த 15918 நிமிடங்கள் அளவுக்கு ஈடான உணவு நன்கொடையின் மூலம் கனடிய தமிழர்கள் வருடந்தோறும் அவர் நினைவைப் போற்றுகின்றனர். மேலும் விவரங்களை *https://ottawatamilassociation.ca/fooddrive* என்ற இணையதள இணைப்பின் வழியே அறியலாம்.

அருவி

குறுங்கதைப் போட்டி

கதை சொல்லும் மரபு தொன்றுதொட்டு இருந்து வந்த வழக்கம் என்பதைத் தொல்காப்பியர்

பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்

என்று உரைத்துள்ளார்.

தற்போதைய காலத்தில் தொடர்கதைகளாகவோ , இதிகாசங்களாகவோ படிக்க நேரமின்மையால் சிறுகதைகள் எழுதும் வழக்கம் ஏற்பட்டு மிகப்பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் அருவிக் குழு வடஅமெரிக்காவில் வாழும் எழுத்தாளர்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பை இந்த ஆண்டு அமைத்துக் கொடுத்துள்ளது. பேரவையின் அருவி இதழ் குறுங்கதைப் போட்டி ஒன்றை முதன்முறையாக அறிவித்துள்ளது.

வட அமெரிக்க வாழ் தமிழர்களின் பல்திறமைகளை வெளிக் கொணரப் பேரவை பல விதங்களிலும் முயற்சி செய்து வருகிறது.அந்த வகையில், அருவி இதழ் வழியே அமெரிக்க வாழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரை அறிமுகப்படுத்தி அவர்களின் படைப்புகளை அனைவரிடமும் கொண்டு சேர்த்து வருகிறது.

அருவி இதழ் பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் செய்திகளைத் தாங்கி வரும் செய்திமடலாக மட்டுமல்லாமல் ஒரு இலக்கிய இதழாகவும் வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல் கல்லாக, வட அமெரிக்காவில் உள்ள எழுத்தாளர்களை இனம் காணவும், வளர்த்து வரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் முயற்சியாகவும் இந்தக் குறுங்கதை போட்டி அமையும். இது வட அமெரிக்காவில் வசிக்கும் எழுத்தாளர்களுக்கு மட்டுமேயான போட்டி.

இந்தப் போட்டி அக்டோபர் 20, 2023 முதல் டிசம்பர் 20, 2023 வரை நடக்கிறது. எழுத்தாளரின் விருப்பம் போல் தலைப்பையும் கருவையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். உங்கள் படைப்புகளை, https://forms.gle/3dTWVZmpRgGzMFnn8, படிவத்தின் மூலம் பதிவு செய்யவும்.

தேர்வு செய்யப்படும் சிறந்த ஐந்து படைப்புகளுக்குத் தலா 50 வெள்ளிகள் பரிசு காத்திருக்கிறது. 2024 மார்ச் மாத அருவி இதழில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும். வெற்றி பெற்ற குறுங்கதைகளும் இந்த இதழில் வெளியிடப்படும்.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

Federation of Tamil Sangams of North America (FeTNA)
(A Registered, Non-Profit, Tax exempt 501(c)(3) Organization)

பேரவையின் அருவி இதழ் நடத்தும்

குறுங்கதைப் போட்டி

வட அமெரிக்கத் தமிழர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்!

பரிசு விவரம்:

தேர்வு செய்யப்படும் சிறந்த ஐந்து படைப்புகளுக்குத் தலா 50 வெள்ளிகள்.

போட்டி விவரம்:

எழுத்தாளரின் விருப்பம் போல் தலைப்பையும் கருவையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள் டிசம்பர் 20, 2023

படைப்புகளை, https://forms.gle/3dTWVZmpRgGzMFnn8, படிவத்தின் மூலம் பதிவு செய்யவும்.

2024 மார்ச் மாத அருவி இதழில் போட்டி முடிவுகள் அறிவிக்கப்படும். வெற்றி பெற்ற ஐந்து குறுங்கதைகளும் இந்த இதழில் வெளியிடப்படும்.

போட்டி விதிமுறைகள்

- ஒருவர் ஒரு கதை மட்டுமே அனுப்பலாம்.
- குறுங்கதை 500 சொற்களுக்குள் இருக்க வேண்டும்.
- போட்டிக்கு அனுப்பப்படும் கதை இதற்கு முன் வேறு எங்கும், எந்த வடிவிலும் பிரசுரமாகி இருக்கக் கூடாது.
- கதை எழுத்தாளரின் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும். தழுவலாகவோ, நகலாகவோ, மொழிபெயர்ப்பாகவோ இருத்தல் கூடாது.
- கதை கண்டிப்பாக யுனிக்கோடு எழுத்துருவில் WORD கோப்பாகத்தான் இருக்க வேண்டும்.

விதிமுறைக்கு உட்பட்டு எழுதப்படாத படைப்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

தீக்குளித்தல்

கவிஞர் மனுஷ்யபுத்திரன்

முகமது ஷமி
அரை இறுதியில்
ஏழு விக்கெட்டுகள் எடுக்கிறான்
ஒரு கேட்சை தவறவிட்டதற்காக
அவன் ஏழு விக்கெட்டுகள்
எடுத்தாக வேண்டும்
தன்னை நிரூபித்தாகவேண்டும்
இல்லாவிட்டால் தண்டனைகள் உண்டு
வரலாற்றுப் பழிகள் உண்டு
வெளியேறுவதற்கான
திறந்த வாயில்கள் உண்டு

வேறு சிலருக்கு அப்படியில்லை
தவறுகளின் சலுகைகள்
அவர்களுக்கு உண்டு
திறமையின்மைகளின் கருணை
அவர்களுக்கு உண்டு

தினம் தினம்
தன்னை நிரூபிக்க வேண்டியிருப்பவர்கள்
அனைவருமே களைப்பாக உணர்கிறார்கள்

தினமும் தங்கள்
அன்பை நிரூபிக்க வேண்டியவர்கள்
காதலை நிரூபிக்க வேண்டியவர்கள்
பொறுப்பை நிரூபிக்க வேண்டியவர்கள்
விசுவாசத்தை நிரூபிக்கவேண்டியவர்கள்
ஆரோக்கியத்தை நிரூபிக்க வேண்டியவர்கள்
தகுதியை நிரூபிக்க வேண்டியவர்கள்
தேசபக்தியை நிரூபிக்கவேண்டியவர்கள்
கற்பை நிரூபிக்க வேண்டியவர்கள்
திறமையை நிரூபிக்க வேண்டியவர்கள்
எல்லோருமே களைப்பாக உணர்கிறார்கள்

அவர்கள் தினம் தினம்
தேர்வுகள் எழுதவேண்டும்
தினம் தினம்
நூறு மதிப்பெண்கள் பெறவேண்டும்
99 மதிப்பெண்கள் கூட
அதிருப்தியுடன்தான் ஏற்கப்படுகின்றன

தினம் தினம்
தன்னை நிரூபிக்கவேண்டிய ஒருவர்
தன்னால்தான் இந்த மழையில்
முழுமையாக நனைய முடியும் என நிரூபிக்க
மழையோடு மழையாக நடந்து செல்கிறார்

நேற்று இரண்டு முறை
நிரூபித்துவிட்டு
இன்று எதையும் நிரூபிக்காமல்
இருக்கட்டுமா என்று கேட்டால்
அதைக் கணக்கில்
வரவு வைத்துக்கொள்ள மாட்டார்கள்

நான் என் பிரியத்தை
தினம் தினம் நிரூபிக்க
இன்று வேறொரு பரிசுகள் விற்கும்
கடைமுன் நின்றுகொண்டிருக்கிறேன்

ஒரிசா பாலு

தமிழர் நலனில் பற்று கொண்டோர் நம்மில் பலர்

தமிழர் நலனையே பற்றிக் கொண்டோர் நம்மில் வெகுசிலரே!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

– திருவள்ளுவர்

ஒரிசா பாலு என்ற பெயரில் அறியப்படும் சிவ பாலசுப்பிரமணியம் அவர்கள் ஏப்ரல் 7 ஆம் நாள் 1963 ஆண்டு திருச்சி மாநகரில் உள்ள உறையூரில் பிறந்தவர், தமிழகத்தின் விழுப்புரம், புதுவை, நெய்வேலி, சென்னை போன்ற இடங்களில் வளர்ந்து வந்த இவர் இயற்பியலில் தேர்ச்சி பெற்றவர். சுரங்கம் மற்றும் வெளிநாட்டுக் கருவிகளை பழுது பார்க்கும் வேலைகள் தொடர்பான பொறியியல் துறையில் பல ஆண்டுகள் ஒரிசாவில் பணிபுரிந்து, இந்தியா முழுவதும் சுற்றி வந்தவர். ஆர். ஏ. ஆர். என்ற பன்னாட்டு நிறுவனத்தில் உயிரி மருந்தியல் மற்றும் மாற்று எரிபொருள் துறையில் இயக்குநராக பணிபுரிந்து வந்தார்.

கடலியல் தமிழ்சார் வரலாற்று ஆய்வாளர் ஒரிசா பாலு காலமானார் என்று கடந்த அக்டோபர் 6 ஆம் நாள் வந்த செய்தி உலகத்தில் உள்ள அனைத்துத் தமிழர்களின் உள்ளத்திலும் மிகப்பெரிய தாக்கத்தை உண்டாக்கியது, ஏனெனில் இந்த மாமனிதர் உலகத்தின் அனைத்து நாடுகளிலும் தமிழ் உறவுகளைத் தேடியிருந்தார். அவரது இழப்பு உலகத் தமிழர்களுக்கு ஒரு மிகப்பெரிய இழப்பாகும். ஒரிசா பாலு அவர்கள் கலிங்கத் தமிழ் தொடர்புகள், தமிழ் – கலிங்க தென் கோசல, ஒட்டர் தொடர்பான தமிழியல் ஆய்வுகளை மேற்கொண்டவர்.அதே போல் இனப்பெருக்கத்திற்கு தமிழக, ஒரிசா கடற்கரைகளுக்கு வரும் கடல் ஆமைகள் தொடர்பான இடங்கள் பிற்காலத்தில் துறைமுகங்களாக மாற்றப்பட்டதையும், ஆமைகள் தம் கடற்கரைகளை தேடி கடல் நீரோட்டத்தில் வரும் வழிகளை பின்பற்றியே தமிழ் கடலோடிகள் உலகம் முழுவதையும் வலம் வந்தனர் என்ற ஆய்வுக் கருத்தையும் முன்வைத்தார்.

ஆமைகள் தொடர்பான இடங்கள் நான்கு ஆயிரத்திற்கு மேற்பட்டு தமிழ் பெயராலேயே விளங்குவதை ஆய்வுகள் செய்து உறுதி செய்து வந்தார். அந்த இடங்களில் தமிழ் மொழி மற்றும் பண்பாடுகள் இன்றும் இருப்பதை நிருபித்து வந்தார். கடலோடிகளை, மீனவர்களை பாய் மரத்தில் மீன்பிடிப்பவர்களாக மட்டும் பார்க்காமல் கடல் சுற்றுச் சூழல் அறிவு பெற்றவர்களாக பார்த்தார். கடல் வள மேலாண்மையின் உலக நடப்புகளை மீனவர்களுக்கு பயிற்சி தந்து வந்தார். தமிழர்கள் கடல் சார் மரபு மற்றும் சுற்றுச் சூழலை காக்க வேண்டி, தமிழகம் முழுவதும் காணொளி காட்சிகள் நடத்தியும், முகநூல் மூலமாகவும் விழிப்புணர்வு செய்து வந்தார்.

கடலார் என்ற மீனவர்கள் சார்ந்த மாத இதழுக்கு ஆலோசகராக பணிபுரிந்தார். மீன் வளம், பாய்மரக் கப்பல், நீர்மூழ்கிகள், மானுடவியல், விலங்கு மற்றும் தாவரம், கடல் சார் தொல்லியல், வரலாறு, பண்பாடுகள், ஆமைகள் பற்றிய ஆய்வு, பாறை ஓவியங்கள், இயற்கை சார்ந்த புவி சுழற்சி தொடர்பாக செய்மதி குழுமம், கடல் சார் குழுமம் மற்றும் ஏனைய அமைப்புகளில் உறுப்பினராக இருந்தார்.இறுதிக் காலத்தில் சென்னையில் வசித்து வந்த இவர் ஒருங்கிணைந்த பெருங்கடல் பண்பாட்டு ஆய்வு நடுவத்தை துவங்கி உலக மக்களுக்கு தமிழருடைய தீபகற்ப கடல் சார் மேலாண்மை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த இயங்கி வந்தார்

அப்படி வாழ்ந்து நம் உள்ளத்தில் நீங்காத இடம் பிடித்த ஒரிசா பாலு அவர்களின் இழப்பு நமக்கும் தமிழ் இனத்திற்கும் பெரிய இழப்பாகும். ஒரிசா பாலு அவர்கள் இறக்கும் வரை தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் என்ன செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டே இருந்தார். அவரால் இயன்ற வகையில் மக்களிடம் உலகத்தமிழர்கள் குறித்த விழிப்புணர்வை உருவாக்கினார். அவர் வலையொளியில் பழந்தமிழரின் சிறப்புகளையும், தமிழர்கள் எப்படி எல்லாம் வாழ்ந்தர்கள், எப்படி எல்லாம் வீழ்ந்தார்கள் என்றும் பேசத்துவங்கிய பின் தான் உலகத் தமிழர்களிடம் தமிழ் குறித்த விழிப்புணர்வு அதிகம் வந்தது என்பதை யாருமே மறுப்பதற்கில்லை.

எந்த உள்நோக்கமும் இல்லாத உண்மையான தமிழ்ப் பற்று கொண்டிருந்த மாமமனிதர். தனது சொந்த பணத்தை செலவு செய்து கடலோடி தரவுகளை சேகரித்த மனிதர் அவர். சொல்வது எளிது செய்வது கடினம், ஆயினும் தன் வாழ்நாளில் பல கடினமான பணிகளை தன்னால் இயன்ற வகையில் செய்து வந்த பண்பின் காவலரை நினைவு கூறும் வேளை இது!

கொலம்பஸ் தமிழ்ச் சங்கம்

கொலம்பஸ் தமிழ்ச்சங்கத்தின் 2023-24 ஆம் ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகிகளாக பின்வரும் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் .

தலைவர் - அன்னலக்ஷ்மி தேவசுந்தரம், செயலாளர் - லாவண்யா ராமு, பொருளாளர் - காயத்ரி முத்து, மக்கள் தொடர்பு - நடராஜன் முத்துசாமி, போட்டிகள் மற்றும் கலை ஒருங்கிணைப்பாளர் - கவிதா கோபிநாத், தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர் - மகேஷ் வாசுதேவநல்லூர் சங்கர், விளையாட்டு & பொழுதுபோக்கு ஒருங்கிணைப்பாளர் - கோபி முத்து பெரியசாமி, தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் - சதீஷ் ராமச்சந்திரன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் - பாலசுப்ரமணியன் சசிகலா நெடுஞ்செழியன்

ஆகஸ்ட் 13ஆம் தேதி தாயகத்திலிருந்து வந்துள்ள பெற்றோர்களுக்காகப் பொன்மாலைப் பொழுது என்ற நிகழ்ச்சி இரண்டாம் முறையாக சிறப்பாக நடத்தப்பட்டது. பெரியவர்களுக்கான விளையாட்டு, விடுகதை, பாடல் என கலகலப்பான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுடன் மருத்துவர் ஷைலஜா அவர்களின் உடல் மற்றும் மனநல ஆரோக்கியத்தைப் பற்றிய உரையும் கேள்வி-பதிலும் முத்தாய்ப்பாய் அமைந்தது. நினைவுப் பரிசுடன் விழா இனிதே நிறைவேறியது.

கொலம்பஸ் தமிழ்ச்சங்கம் லைஃப் கார் அலையன்ஸ்(*Life Care Alliance*) எனும் தொண்டு நிறுவனத்தின் மீல்ஸ் ஆன் வீல்ஸ் (*Meals On Wheels*) என அழைக்கப்படும் முதியோருக்கும், இயலாதோருக்கும் உணவு கொண்டு சேர்க்கும் அரும்பணியை கொரோனா தொற்றுக்குப்பின் மீண்டும் தொடர்கிறது.

செப்டம்பர் 16, 2023 அன்று நூற்றுக்கணக்கான கொலம்பஸ் தமிழர்கள் பெருந்திரளாகத் திறந்த வெளிபூங்காவில் நாள் முழுக்க இருந்து, உண்டு, விளையாடி மகிழ்ந்த விழாவைச் சங்கம் சிறப்பாக நடத்தியது.

செப்டம்பர் 25, 2023 அன்று சங்கத்தின் ஒரு அங்கமான ‘தமிழ்த் திண்ணை’, கொலம்பஸ் பொது நூலகத்திற்கு சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள், தமிழ் இலக்கிய படைப்புகள் மற்றும் குழந்தைகளுக்கானப் புத்தகங்களை அர்ப்பணித்த நிகழ்வு இனிதாக நடந்தேறியது.

கொலம்பஸில், அக்டோபர் 7 அன்று சதுரங்கப் போட்டியையும், இளையோரைக் கல்லூரிக்கு தயார்படுத்தும் பயிற்சி முகாமையும், அக்டோபர் 14, 15 ஆகிய இரு நாட்களில் தமிழகப் பயிற்றுனரின் நேர்முகப் பறை பயிற்சி பட்டறையையும் வெற்றிகரமாக சங்கம் நிகழ்த்தியது.

சாஸ்தா தமிழ் அறக்கட்டளை

அமெரிக்காவின் டல்லாஸ் நகரில் செயல்பட்டு வரும் சாஸ்தா தமிழ் அறக்கட்டளை 12 ஆண்டுகளில் 1 மில்லியன் டாலர்களுக்கு நிதியுதவி செய்து சாதனை படைத்துள்ளது.

கொரோனா காலத்திலும் இடைவிடாது நற்பணிகள் ஆற்றிய சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் 13வது ஆண்டு விழா டல்லாஸில் நடைபெற்றது. இந்த விழாவில் மேலும் ஒரு லட்சத்து 5 ஆயிரம் டாலர்கள் நன்கொடை திரட்டி பல்வேறு அமைப்புகளுக்கு வழங்கியுள்ளனர்.

2023ம் ஆண்டு விழாவில் "விண்ணுக்கும் மண்ணுக்கும்" என்ற தலைப்பில் நாட்டியம் மற்றும் குறு நாடகங்கள் இடம் பெற்றது. இயற்கையை பேணிக் காக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி 8 அம்சங்களை விளக்கும் வகையில் நிகழ்ச்சி அமைந்திருந்தது.

இந்த ஆண்டு திரட்டப்பட்ட தொகையிலிருந்து உதவும் கரங்கள் அமைப்பில் வைப்பு நிதியாக 70 ஆயிரம் டாலர்கள் முதலீடு செய்யப்படுகிறது. இதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஏழைக் குழந்தைகளுக்கு திறன் பயிற்சி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

டல்லாஸ் யுனிவர் சிட்டி ஆஃப் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டிலிருந்து முதுகலை பயிலும் மாணவர்களுக்கு நிதியுதவி அளிக்கும் வகையில், வைப்பு நிதிக்கு 10 ஆயிரம் டாலர்கள் வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உணவில்லாதோர்க்கு உணவுப் பொருட்கள் வழங்கும் நார்த் டெக்சாஸ் உணவு வங்கிக்கு 20 ஆயிரம் டாலர்கள் நிதியுதவி வழங்கப்பட்டது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1 மில்லியன் உணவுப் பொட்டலங்கள் வழங்கவும் உறுதியளிக்கப்பட்டது.

அமெரிக்காவில் செயல்பட்டு வரும் தமிழ் அமைப்புகளில். தமிழ்நாடு மற்றும் அமெரிக்காவின் பொதுநலப் பணிகளுக்காகப் பெருமளவிலான தொகையைத் திரட்டி நிதியுதவி செய்து வரும் அமைப்புகளில் சாஸ்தா தமிழ் அறக்கட்டளை முன்னுதாரணமாக விளங்கி வருகிறது. இந்த நிகழ்வுக்காக சுமார் 200 தன்னார்வலர்கள் நாட்டிய நாடகம் உட்பட பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், எழுத்தாளர் தமிழ்க்காரி, முனைவர் சித்ரா மகேஷ் அவர்களைப் பாராட்டி சிறப்பித்தது நிகழ்ச்சிக்கு கூடுதல் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்தது. 1330 குறளுக்கும் முழுமையாக உரை எழுதிய முதல் பெண் உரையாசிரியர் என்ற சாதனையை படைத்துள்ளார் முனைவர் சித்ரா மகேஷ். இவர், சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் தன்னார்வலரும், சாஸ்தா தமிழ் அறக்கட்டளை கடந்த 16 ஆண்டுகளாக வருடம் தோறும் நடத்தும் திருக்குறள் போட்டியில் 2016 ஆம் ஆண்டு 1330 திருக்குறளையும் பொருளுடன் கூறி குறளரசி பட்டத்தை வென்றவருமாவார்.

மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கம்

மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக தீபாவளிப் பண்டிகை வெகு விமர்சையாக நவம்பர் 11, 2023 அன்று கொண்டாடப்பட்டது. காலை முதல் மாலை வரை நடைபெற்ற விழாவில் பல்வேறு கண்கவர் ஆடல், பாடல் மற்றும் மரபுக்கலை நிகழ்ச்சிகள் நடந்தன. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை மேடை நிகழ்ச்சிகளில் பங்கேற்று அனைவரையும் மகிழ்வித்தனர். தீபாவளி விழாவின் ஒரு அங்கமாக குழந்தைகளுக்கான ஓவியப்போட்டியும், மகளிருக்கான சிறுதானிய இனிப்புப் பலகாரம் செய்யும் போட்டியும் நடத்தப்பட்டன. உறுப்பினர்கள் இதில் மிகுந்த ஆர்வத்துடன் பங்குகொண்டு தங்களின் திறமையை வெளிப்படுத்தினர்.

ஓவியப்போட்டி, இரண்டு பிரிவுகளாக நடத்தப்பட்டது. 5 - 11 வயது குழந்தைகள் ஒரு பிரிவிலும், 12 - 17 வயது குழந்தைகள் மற்றோரு பிரிவிலும் பங்குபெற்றனர். முதல் கட்டமாக ஓவியப்போட்டிக்கு இணையவழியில் போட்டியாளர்கள் தங்கள் படைப்பைச் சமர்ப்பித்தனர். ஒவ்வொரு பிரிவிலும் இருந்து பத்து ஓவியங்கள் இறுதிப்போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தீபாவளி விழா அன்று நடந்த இறுதிப்போட்டியில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் மூன்று ஓவியங்கள் முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசைப் பெற்றது.

சிறுதானிய இனிப்புப் பலகாரம் செய்யும் போட்டிக்கு மகளிர் பலர் தாங்கள் செய்த இனிப்புகளைக் கொண்டு வந்திருந்தனர். சிறுதானியங்களில் இவ்வளவு இனிப்பு வகைகளை செய்யலாம் என அறிந்து கொள்ள முடிந்தது. டல்லாஸ் பகுதியில் உள்ள உணவகங்களில் இருந்து மூன்று சமையல் கலைஞர்கள் நடுவர்களாக வந்திருந்து இனிப்புகளைச் சுவைத்து செய்முறையைக் கேட்டறிந்து, பின்னர் அதிலிருந்து மூன்று இனிப்புகளைத் தேர்ந்தெடுத்து முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசு வழங்கினர்.

பரிசுபெற்ற அனைவருக்கும் கோப்பையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது.

வந்திருந்த அனைத்து மக்களும் தீபாவளி விழாவை ஒரே குடும்பமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

இதைத் தொடர்ந்து பொங்கல் விழாவுக்கான சிறப்பு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மலரும் மலர்களின் நாட்கள்

எழுத்தாளர் திரு. இலட்சுமி சரவணகுமார்

'India is larger than universe' என ஓரிடத்தில் போர்ஹே குறிப்பிடுகிறார். இந்தியப் பெருநிலத்தை முழுமையாக அறிந்துகொள்ள ஒருவனுக்கு ஒரு முழு ஆயுள் போதாது. ஒரு நிலத்தைப் பார்ப்பதும் அறிந்துகொள்வதும் வெவ்வேறானது. அறிந்துகொள்வதென்பது அறிவு தொடர்பானது. சுற்றுலாப் பயணிகள், ஊர் சுற்றிகள், நாடோடிகள் என பயணிக்கிறவர்களை வெவ்வேறாக நாம் வகைப்படுத்த முடியும். தனக்கிருக்கும் நெருக்கடியான வாழ்விலிருந்து சிறிய ஓய்வெடுத்துக்கொண்டு ஒரு சில நாட்களைப் புதிய இடங்களில் செலவிடுகிறவன் சுற்றுலாப் பயணி. அவனுக்கு அந்த நிலத்தின் வரலாறு குறித்தோ வாழ்க்கை குறித்தோ மக்களைக் குறித்தோ எந்தவிதமான அக்கறைகளும் தேவையில்லை. ஒரு புதிய நிலத்தில் சுற்றுகிற கிளர்ச்சி மட்டுமே அவர்களது இலக்கு. எதையும் கற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிப்பதில்லை. ஒரு ஊர் சுற்றி சுற்றுலாப் பயணிகளின் இலக்குகளோடு சுற்றுவதில்லை. அவன் தனக்கான எல்லைகளை வகுத்துக் கொள்ளாமல் ஒவ்வொரு நாளும் புதிய வானத்தையும் நிலத்தையும் எதிர்கொள்கிற பேரார்வத்தோடு செல்கிறான். பறவையின் இறகைப்போல் வாழ்வை இலகுவாக எதிர்கொள்ளத் தெரிந்திருப்பதுதான் ஒரு நல்ல ஊர் சுற்றிக்கு முக்கியம். தான் பயணிக்கும் நிலத்தின் குறைந்தபட்ச வரலாறு, மக்களின் வாழ்க்கை முறை, காலநிலை மாற்றங்கள் இவற்றைக் குறித்தெல்லாம் அக்கறை கொண்டவனே நல்ல ஊர் சுற்றி. கடைசியாக இருக்கக் கூடிய நாடோடி என்பவன் நிலமற்றவன். இந்தப் பூமிப்பந்தில் நாடோடி என்கிற அடையாளத்தைத் தவிர வேறு எந்த அடையாளங்களையும் தனக்குப் பொருத்திக் கொள்ள விரும்பாதவன். அவனே முழுமையான பயணி. வரலாற்றின் நெடும் பக்கங்களைத் திரும்பிப் பார்க்கையில் பாஹியான், மார்க்கோ போலோ, இஃப்ன் பதூதா எனப் பெரும் நாடோடிகளே கடந்த காலத்தை நாம் அறிந்துகொள்வதற்கான சாட்சிகளாக இருந்திருக்கிறார்கள். நாடோடிகள் அழிவற்றவர்கள். இந்த மூன்று நிலைகளில் நானொரு ஊர்சுற்றி.

புதிய நிலங்களுக்குப் பயணிப்பதோடு ஒரே நிலத்திற்கு மீண்டும் மீண்டும் பயணிப்பதும் எனக்கு முக்கியமானது. எங்கெல்லாம் பயணம் செய்கிறேனோ அங்கெல்லாம் வேகமாய் நண்பர்களை உருவாக்கிக் கொள்வது எனது வழக்கம். குஜராத் மாநிலத்திலும் சண்டிகரிலும் உத்திரபிரதேசத்தின் லக்னோவிலும் சில மாதங்கள் வேலை செய்திருக்கிறேன். வேலை செய்த காலத்தில் கிடைத்த நண்பர்களைச் சந்திக்க அவ்வப்போது அங்கு செல்வதுண்டு. நண்பர்களுடன் இணைந்து அந்த மாநிலங்களின் கிராமங்களுக்குள் பயணிப்பதே அந்தப் பயணங்களின் முக்கியமான நோக்கமாக இருக்கும். குஜராத்தின் வதோராவில் வேலை செய்த நாட்களில் என்னோடு பணி செய்த ஒரு நண்பரை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். அவரது சொந்த ஊர் ராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்சால்மீருக்கு அருகில் சிறிய கிராமம். மாதத்தில் இரண்டு நாட்கள் விடுமுறை கிடைக்கும். அந்த இரண்டு நாட்கள் விடுமுறையைக் கழிக்க ரயிலிலும் பேருந்திலும் பதினோறு மணிநேரங்கள் பயணம் செய்வார். இரண்டு நாட்களில் பெரும்பகுதி பயணத்தில் முடிந்துவிடும். ஆனாலும் சில மணி நேரங்கள் குடும்பத்தினரோடு இருப்பது அவருக்கு முக்கியம். இது நடந்தகாலம் 2004. இப்பொழுது நண்பர் ஜெய்சால்மீரில் தனியாக தொழில் துவங்கி நல்ல நிலையில் இருக்கிறார்.

மனிதர்களின் வழியாக நிலத்தை அறிந்துகொள்வதுதான் எனக்கு முக்கியமானது. அந்த வகையில் இந்தியாவில் எந்த மாநிலங்களுக்குப் பயணித்தாலும் அந்த மாநிலங்களின் கிராமங்களை அறிந்துகொள்வது எனது பயணத்தில் ஒரு அங்கமாக இருக்கும்.

மேகாலயா மாநிலத்தின் தலைநகரான ஷில்லாங்கில் ஒவ்வொரு ஆண்டும் *Blossom Festival* என்ற பெயரில் கலை திருவிழா பிரம்மாண்டமான முறையில் நடைபெற்று வருகிறது. அந்த மாநில அரசே முன்னின்று நடத்தும் இந்த கலைத்திருவிழா வடகிழக்கு மாநிலங்களில் மிகவும் பிரசித்தபெற்ற ஒன்று. 2021 ம் வருடம் இந்தக் கலைத்திருவிழாவை முன்னிட்டு பதினைந்து நாட்கள் மேகாலயா மாநிலத்திற்கு பயணிக்க நேர்ந்தது. வடகிழக்கு மாநிலங்களில் மணிப்பூர் மேகாலயா தவிர்த்து மற்ற மாநிலங்களுக்கு அதற்கு முன்பே பயணித்திருக்கிறேன். பார்ப்பதற்கு ஒன்று போலிருந்தாலும், அந்த மக்களில் ஒவ்வொரு இனக்குழுவுக்கும் தனித்துவமான கலாச்சாரங்கள் உண்டு. காசி, காரோ, குக்கி, போடோ, புட்டியா, நியாஸி, அங்காமி என கணக்கற்ற பழங்குடிகளில் மேகாலயாவில் வசிப்பது அதிகமும் காசிப் பழங்குடியினர் தான். சொல்லப்போனால் இந்த மாநிலத்தில் அதிக மக்கள்தொகை கொண்டவர்களும் இந்த இனக்குழுக்கள்தான்.

சுதந்திரத்திற்குப் பிறகான இந்தியாவில் வடகிழக்கு மாநில மக்கள் அரசியல் காரணங்களுக்காக இன்றளவும் வஞ்சிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள். அரசு இயந்திரமும் ஊடகங்களும் இவர்களைப் பற்றி உருவாக்கும் மலினமான சித்திரங்களை பெரும்பான்மையான மக்களும் கடைபிடிக்கிறார்கள் என்பதுதான் கொடுமை. உருவத்திலும் கலாச்சாரத்திலும் பிற இந்திய மாநில மக்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் வடகிழக்கு இந்தியர்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் பழங்குடிகள் பேசக்கூடிய ஏராளமான மொழிகள் இன்றளவும் புழக்கத்திலிருக்கின்றன. இயல்பாகவே பழங்குடி இனத்தவர்களுக்கு தங்களது கலாச்சார அடையாளங்களின் மீது அதீது பற்று இருப்பதுண்டு. பலநூறு ஆண்டுகளாய் மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்துவரும் பழங்குடிகளின் நீண்ட மருத்துவ அறிவும் சூழலியல் சார்ந்த புரிதல்களும் அவர்கள் மொழிகளில்தான் இன்றளவும் இருக்கின்றன. அந்தக் காடுகளும் மருத்துவமுறைகளும் நிலைத்திருக்க வேண்டுமெனில் அந்த மக்களின் மொழியும் கலாச்சார அடையாளங்களும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் .

அஸ்ஸாமியின் குவாத்தியில் உள்ள காமாக்யா தேவி ஆலயம் எனக்கு விருப்பமான இடங்களில் ஒன்று. ஆகையால் பயணத்தை அங்கிருந்து துவங்க திட்டமிட்டிருந்தேன். நதியைத் தெய்வமாக வழிபடும் மரபு தென்னிந்தியர்களை விடவும் வட இந்தியர்களுக்கு அதிகம். குறிப்பாக பிரம்மாபுத்திரா நதி இந்தியாவின் பிரம்மாண்டம். அஸ்ஸாமியர்கள் தங்கள் மரபுகளைக் கொண்டாடுவதைப் போலவே இயற்கையையும் அதீதமாக நேசிக்கக் கூடியவர்கள். காமாக்யா அஸ்ஸாமியர்களின் அன்னை. ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதத்தில் குவாத்தியில் நடைபெறும் காமாக்யா தேவி திருவிழா இந்தியாவின் அற்புதங்களில் ஒன்று. அந்த மக்களின் நம்பிக்கையின்படி ஷக்தி அசுரனை வதம் செய்த பின்னாலும் அவளது உக்ரம் குறையாமல் ருத்ரதாண்டவமாடிக் கொண்டிருக்க, இறுதியாக சிவனே அவளோடு போரிடும் சூழல் உருவாகிறது. அந்தப் போரில் ஷக்தியின் உடல் துண்டாடப்பட்டு இமயத்தின் வெவ்வேறு இடங்களில் விழுகிறது. இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு சக்தி வழிபாட்டுத் தலங்களுக்கும் அம்மையின் ஒவ்வொரு உடல் பாகத்தோடு தொடர்புண்டு. அந்த வகையில் காமாக்யாவில் விழுந்தது அவளது யோனி. இந்த ஆலயத்தின் அமைப்பு கொஞ்சம் கொஞ்சமாய் சுருங்கி சுருங்கி இறுதியாக ஒரு சின்னஞ்சிறிய குகைக்குள் சென்று வழிபடுவதாக இருக்கும். பெருங்கூட்டத்தைக் கடந்து நீங்கள் உள்ளே செல்கையில் அன்னையின் கருவறைக்குள் மீண்டும் புகுந்து செல்வதுபோன்ற அதிர்வுகளைத் தரக்கூடிய இடம். தெய்வ வழிபாடு இல்லாதவர்கள்கூட ஜூலை மாதத்தில் நடைபெறும் இந்தத் திருவிழாவிற்குச் செல்ல நேர்ந்தால் மக்களுக்கும் இயற்கைக்குமான ஆத்மார்த்தமான அதிர்வுகளை உணர்ந்துகொள்ளமுடியும்.

காமாக்யா தேவி திருவிழா நடைபெறும் அந்த மூன்று நாட்களும் அஸ்ஸாமியர்கள் எந்த வேலைகளும் செய்யமாட்டார்கள். அவர்களின் நம்பிக்கையின்படி ஒவ்வொரு ஆண்டும் பூமியின் புதிய பிறப்பிற்கான நாட்கள் அவை. எங்கும் சிவப்பு வண்ணம் சூழ அஸ்ஸாமியப் பெண்கள் ஷக்தி வடிவம் பூண்டிருப்பார்கள். நான் முதல்முறையாக அதுபோன்றதொரு திருவிழாவிற்கு அந்த ஆலயத்திற்குச் சென்றிருந்ததால் வடகிழக்குப் பயணங்களில் எனக்கு எப்போதுமே காமாக்யா தேவி ஆலயம் முக்கியமானது. எனது பயணங்களில் நன் அன்னையை வணங்கச் செல்லும் அந்த ஆலயத்திற்குள் எனக்குள்ளிருந்த பழைய மனிதன் மறைந்து ஒரு புதிய மனிதன் அந்த கருவறைக்குள் பிறப்பதாகவே உணர்வேன். இந்தப் பயணத்திலும் அப்படியானதொரு நிறைவான உணர்வோடு காமாக்யா தேவியை தரிசித்துவிட்டு ஷில்லாங் நோக்கிப் புறப்பட்டுவிட்டேன். எனக்கு வழித்துணைவராக பயணம் முழுக்க உடனிருந்தவர்

எழுத்தாளர் இலட்சுமி சரவணகுமார்

எழுத்தாளர் இலட்சுமி சரவணகுமார் கதை, கவிதை, கட்டுரை, விமர்சனம் என பன்முக படைப்புகளைத் தருபவர். இவர் இதுவரை மூன்று நாவல்களையும், முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். திரைப்பட உதவி இயக்குநராக பணிபுரிகிறார். 'மயான காண்டம்' எனும் குறும்படம் மூலம் சர்வதேச அளவில் பிரபலமான சரவணகுமார், 'கானகன்' என்ற நாவலுக்கு 2016 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமியின் 'யுவ புரஸ்கார்' விருதினை வென்றார். இவர் எழுதிய உப்பு நாய்கள் என்ற புதினத்துக்காக 2012ஆம் ஆண்டுக்கான சுஜாதா நினைவு விருது பெற்றுள்ளார்.

இந்தக் கட்டுரையை அருவி வாசகர்களுக்காக எழுதி அளித்தமைக்கு எழுத்தாளர் திரு. இலட்சுமி சரவணகுமார் அவர்களுக்குப் பேரவை அருவி குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

காசிப் பழங்குடியைச் சேர்ந்தவர். அதனால் மேகலாயா மக்களையும் வாழ்வையும் குறித்து ஏராளமான விவரங்களை அவரோடு உரையாடித் தெரிந்துகொள்ள முடிந்தது. ஒரு பயணத்தில் அந்த நிலத்தைச் சார்ந்த ஒரு மனிதனோடு பயணிக்கையில் நமக்கு அவர்களின் வாழ்க்கை நெருக்கமாக அறிமுகமாகிறது. வெவ்வேறான கலாச்சாரங்களைப் புரிந்துகொள்ள முடிந்த ஒருவனுக்கு பொருட்களைச் சேர்ப்பதை விடுத்து அனுபவங்களைச் சேர்ப்பதில் ஆர்வம் கூடும். வாழ்க்கை நமக்குத் தரும் அன்பளிப்பு இந்த அனுபவங்கள்தான்.

கொரோனா ஊரடங்கு முடிந்து நிபந்தனைகளோடு பயணங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த காலம். அதனால் மாநில எல்லைகளைக் கடப்பதற்கு தனியாக அனுமதி வாங்க வேண்டியது உட்பட ஏராளமானக் கட்டுப்பாடுகள் இருந்தன. இந்த நிலையில் ஒரு கலைத்திருவிழாவிற்கு என்ன கூட்டம் வந்துவிடப் போகிறதென்று நினைத்திருந்தேன். ஆனால் அந்த மக்கள் என் எண்ணத்தைப் பொய்யாக்கிவிட்டார்கள். இலக்கியத் திருவிழா நடந்த கல்லூரியில் பெருங்கூட்டம். ஏராளமான அரங்குகள், மிகச்சிறந்த சொற்பொழிவுகள். இன்னொரு புறம் என்னை ஆச்சர்யப்படுத்தியது இசைத் திருவிழாவிற்குத் திரண்ட கூட்டம். வடகிழக்கு மாநில மக்களின் இசை ரசனை மற்ற இந்திய மக்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டது. அவர்கள் ஒரே நேரத்தில் உலகின் அத்தனை சிறந்த இசைக்குழுக்களையும் ரசிக்கிறவர்களாகவும் தங்களது பழங்குடிப் பாடல்களை நவீனப்படுத்தி புதியனவற்றை உருவாக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். அதனாலேயே நவம்பர் டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு இந்திய மாநிலங்களில் நிறைய இசைத் திருவிழாக்கள் நடைபெறுவதைப் பார்க்க முடியும். நாகலாந்தின் ஹார்ன்பில் ஃபெஸ்டிவல், அருணாச்சலப் பிரதேச மலைகளில் நடைபெறும் ராக் இசை திருவிழாக்கள், மேகாலயாவில் நடைபெறும் ப்ளாசம் மலர்த் திருவிழா என பெரும் இசைக் குழுக்களின் அணிவகுப்பை இங்கு காணமுடியும்.

மேகலாயா மக்களின் கலையுணர்ச்சி அலாதியானது. பத்து வருடங்களுக்கு முன்னால் என நினைவு, பெங்களூரில் உலகப் புகழ்பெற்ற மெட்டாலிகா இசைக்குழுவின் நிகழ்ச்சி நடந்தது. அந்த நிகழ்வில் கலந்துகொண்ட நாலாயிரத்தி சொச்சம் பேரில் நானும் ஒருவன். பெங்களூரு போன்ற ஒரு பெரும் நகரத்திலேயே இசையார்வத்தோடு வந்தவர்களின் எண்ணிக்கை அவ்வளவுதான். இத்தனைக்கும் இந்தியாவின் முன்னோடியான கலாச்சார நகரங்களில் பெங்களூருவும் ஒன்று. அதேபோல் சென்னையில் 2015 ம் வருடம் நடந்த யானியின் இசை நிகழ்விலும் நான் கலந்துகொண்டிருக்கிறேன். அங்குமே மூவாயிரத்திற்குக் குறைவான கூட்டம்தான். ஆனால் ப்ளாசம் திருவிழாவில் ஒவ்வொரு நாளும் மாலை இசை நிகழ்விற்கு குறைந்தது இருபத்தைந்தாயிரம் பேராவது வந்திருப்பார்கள். ஊரடங்கு விதிகளின் காரணமாய் பயணங்கள் கடுமையாக இருந்த காலகட்டம் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. ஒவ்வொரு நாட்டு இசைக்குழு. தாய்லாந்து, போர்ச்சுக்கல், கொரியா என எல்லோருமே புகழ்பெற்ற இசைக்குழுக்கள். நான் கொரியான் ப்ளாக் பிங்க் என்ற குழுவின் இசை நிகழ்வில் கலந்துகொண்டிருந்தேன். நவம்பர் மாதத்தில் பகல் வேளையில் பதினைந்திலிருந்து இருபது டிகிரி குளிரும் இரவில் எட்டு டிகிரி வரையும் குளிர் இருக்கும். மாலை ஆறு மணிக்கு மேல் துவங்கும் இசை நிகழ்ச்சிக்கு பிற்பகலிலேயே மக்கள் திரண்டு வந்திருந்தார்கள். ஒரு பயணத்தில் இதுபோன்ற அனுபவங்கள் எல்லாம் மகத்தானவை. ஒரு புதிய

நிலத்தில் உங்களுக்கு அறிமுகமே இல்லாத பெரும் மக்கள் கூட்டத்திற்கு நடுவிலிருந்து நீங்கள் ஒரு இசை நிகழ்வைக் கண்டு களிக்கிறீர்கள். இசைக்கு நடனமாடுகிறீர்கள், அந்தக் குளிரிலும் திரண்டிருக்கும் மக்கள் கூட்டத்தின் வெக்கையில் வியர்க்க உங்கள் குளிர் ஆடையைக் களைந்து கிடைக்கும் உயரமான இடமொன்றில் நின்று கூட்டமே திரும்பிப் பார்க்க நடனமாடுகிறீர்கள். இந்த விடுதலையுணர்வு எத்தனை பெறுமதியானது?

எனக்கு வழித்துணையாய் இருந்த உள்ளூர் நண்பர் நான்காவது நாள் என்னோடு வரமுடியாமல் போக, அவருக்குப் பதிலாக அவரது உறவினர் ஒருவர் இணைந்துகொண்டார். அன்றைக்கு நாங்கள் சிரபுஞ்சி சென்று அங்கு தங்கவேண்டும். என்னோடு வந்தவருக்கு மிகச் சுமாராகவே ஆங்கிலம் பேச வரும். எனக்கு அவரை விடவும் மிகச் சுமாராகவே ஆங்கிலம் பேசத் தெரியும் என்று தெரிந்தபிறகுதான் அவருக்கு ஆறுதல்.

அதிகாலையிலேயே ஷில்லாங்கிலிருந்து கிளம்பிவிட்டோம். உலகிலேயே அதிகம் மழை பெய்யுமிடம் சிரபுஞ்சி என்கிற அடையாளம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டிருக்கிறது. முக்கியமான காரணம் அங்கு அதிகரித்து வரும் நிலக்கரிச் சுரங்கங்கள். சுரங்கங்களிலிருந்து வெளியாகும் தூசிகளும் மலைகளை அளவுக்கு அதிகமாய் அவர்கள் ஆழப்படுத்துவதும் பெரும் சூழலியல் மாற்றங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. போதாக்குறைக்கு சாலைகளை விரிவுபடுத்த வேண்டி பெரும் மலைகளை உடைத்து சிதறடித்துக் கொண்டிருக்கிறார்கள். எப்போதும் தூறலும் சாரலுமாய் இருந்த சிரபுஞ்சியின் மழையளவு குறைந்துவிட்டிருக்கிறது. பசுமையான சமவெளிகள், பிரம்மாண்டமான அருவிகள், மலைகள் என சிரபுஞ்சி பூலோகத்தின் சொர்க்கம். ஆனால் மனிதர்களின் பேராசை அந்த ஊரின் மகத்துவங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக சிதைக்கத் துவங்கியிருக்கிறது. முதல்நாள் நாங்கள் சிரபுஞ்சியிலிருந்த ஒரு குகைக்குச் சென்றுவிட்டு பின் அங்கிருந்து *nohkaikai* அருவி இருக்கும் மலை உச்சிக்குச் சென்றோம். நான்கு மணிக்குமேல் வெளிச்சம் குறைந்து சூரிய அஸ்தமனமாக மலையுச்சியிலிருந்த கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டு மக்களும் கிளம்பிச் செல்லத் துவங்கியிருந்தனர். நானும் என்னோடு இருந்த பழங்குடி நண்பரும் மலையின் ஒரு எல்லையில் நானூறு அடி உயரத்திலிருந்து விழும் அருவியையும் இன்னொருபுறம் பிரம்மாண்டமான சூரிய அஸ்தமனத்தையும் பார்த்துக் கொண்டிருந்தோம். வாழ்வில் அதுபோல் இன்னொருநாள் எனக்குத் திரும்பக் கிடைத்துவிடாது என மனம் நிறைந்தது. ‘இந்த அருவிக்கு ஒரு கத இருக்கு..’ என எனது நண்பர் சொல்ல, நான் அவரிடம் கதை கேட்க ஆர்வப்பட்டேன். எங்க காசி மக்களோட நம்பிக்க இது. ரொம்ப வருசம் முன்னால இந்தக் காட்டுல இருந்த காசிப் பழங்குடி பொண்ணு ஒருத்தி வேற பழங்குடி இனத்த சேர்ந்த ஒரு பையனைக் காதலிச்சிருக்கா.. அவன் ஒரு புல்லாங்குழல் கலைஞன். அவங்க ரெண்டு பேர் காதல் ஊருக்கே தெரியும். ஆனா வேற வேற இனங்கறதால அவங்களால சேரமுடியல... ஒரு நாள் அவன் அவளோட சேரமுடியாத ஏக்கத்துலயே இறந்துடறான்... அந்தப் பெண் அவனுக்காக மனம் உடஞ்சு கண்ணீர் விட்டு அழ ஆரம்பிச்சா... அந்தக் கண்ணீர் தான் இந்த அருவி... இப்பயும் அவளோட அழுகைய எங்க மக்களால கேக்கமுடியும்..’ என அவர் சொல்லி முடித்தபோது இருட்டியிருந்தது. நாங்கள் அறைக்குத் திரும்ப முடிவு செய்தபோது அங்கு மனித நடமாட்டமே இல்லை. குளிர் பெரும் போர்வையாய் எங்களைச் சூழ்ந்திருக்க எதையும் பேசமுடியாத அமைதியில் நான் இறுகியிருந்தேன். ஷில்லாங்கிலிருந்து கிளம்புகையில்

எனக்காக எடுத்து வந்திருந்த ‘கியாட்’ என்னும் அரிசியில் தயாரான பியரை அருந்தக் குடுத்தார். நான் அமைதியாக இரண்டு போத்தல் பியர் அருந்துவிட்டு வேடிக்கை பார்த்தபடியே உறங்கிவிட்டேன்.

அடுத்த நாள் பிற்பகல் வேளையில் டவ்க்கி ஆற்றுக்குச் செல்லும்போதுதான் இவரது உறவினர் (எனது பயணத் துணைவர்) வரமுடியாமல் போனதற்கான காரணத்தை என்னிடம் விளக்கினார். எனது நண்பர் காசிப் பழங்குடி, அவர் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட பெண் வேறு இனம். காசிப் பழங்குடியினர் தாய்வழிச் சமூகத்தினர். அந்த சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண் வேறு சமூகத்தில் திருமணம் செய்துகொண்டாலும் அவளின் குழந்தைகளுக்கு தாயின் பெயர் கிடைத்துவிடும், ஆனால் ஆண் திருமணம் செய்து கொள்ளும் போது அப்படி நடப்பதில்லை. சொத்திலும் இயல்பாகவே இளைய மகளுக்குத்தான் உரிமை அதிகம். நிறைய காசி இனப் பெண்கள் வேற்று இனங்களோடு திருமணம் செய்கையில் சொத்தில் ஒரு பகுதி வேறு இனங்களுக்குச் செல்வதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. பழங்குடி நிலங்கள் மற்றும் உரிமைகள் தொடர்பாக வடகிழக்கு மாநிலங்களில் நிறைய சிறப்புச் சட்டங்கள் உண்டு. இந்தப் புதிய திருமணங்கள் அந்த விதிகளை மீறுபவையாக இருப்பதால் அதனை தடுக்கும் ஒரு மசோதாவைக் கொண்டுவர சில வருடங்களாக வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. என் நண்பரின் குடும்பச் சூழலும் அதுபோலொரு சிக்கலில் அமைந்துவிட்டதால்தான் என்னோடு பயணத்தில் தொடரமுடியவில்லை என சொன்னபோது முந்தைய நாள் அவர் அருவியில் வைத்துச் சொன்ன கதையை நினைத்துக் கொண்டேன்.

இன்றைக்குப் பயணம் செய்ய விரும்புகிறவனுக்கு அவனையொத்த மனிதர்களோடு பயணிக்க ஏராளமான வாய்ப்புகளுண்டு. உலகம் முழுக்க ஏராளமான குழுக்கள் பயணிகளுக்காக இயங்கி வருகின்றன. கொரோனா பெருந்தொற்று துவங்குவதற்கு முன்னால் *woofing* என அதுபோன்றதொரு குழுவில் உறுப்பினராகி நாற்பது நாட்கள் நேபாளத்தில் பயணம் செய்ய நேர்ந்தது. வாய்ப்பிருந்தால் அந்தப் பயணம் குறித்து இன்னொருமுறை எழுதுகிறேன். மேகாலயாவில் இருந்த நாட்களில் நான் கவனித்ததும் கற்றுக்கொண்டதும் ஏராளம். எத்தனை அரசியல் நெருக்கடிகள் இருந்தாலும் அந்த மக்களின் விடுதலையுணர்ச்சி அதில் முக்கியமானது. தங்கள் அடையாளங்களை அவர்கள் ஒருபோதும் கைவிடுவதில்லை. அதேநேரத்தில் நவீனத்திற்கும் தங்களை உட்படுத்திக் கொள்கிறார்கள். ஷில்லாங்கில் உள்ள அருங்காட்சியகம் மிக முக்கியமானது, வடகிழக்கில் உள்ள ஏழு மாநிலங்களையும் புரிந்து கொள்வதற்கான பெரும் சேகரிப்புகளைக் கொண்டிருக்கும் அருங்காட்சியகம். தங்கள் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் மிக உயர்வாய்ப் போற்றும் அந்த மக்களை இங்கே தமிழகத்திலோ மராட்டியத்திலோ ஒரு சமவெளி மனிதன் சாதாரணமாக சிங்கி என கேலிப்பெயர் கொண்டு அழைப்பதைப் பார்க்கையில் பல சமயங்களில் ஆத்திரமாக இருக்கும். வடகிழக்கு மக்களுக்கு இருக்கும் அரசியல் விழிப்புணர்ச்சி, திறந்த மனம், எல்லோரையும் இன்முகத்தோடு நடத்துவது, முக்கியமாக எந்த நிலையிலும் சகமனிதர்களை நேசிப்பதென கலாச்சாரத்திலும் பண்பாட்டிலும் மேம்பட்ட மக்கள். கடந்த சில மாதங்களுக்குமுன் மணிப்பூரில் துவங்கிய கலவரத்தின் வேரிலிருந்து கவனித்து வந்தவர்களுக்குத் தெரியும் அரசியல் லாபங்களுக்காக அந்த மாநிலத்தின் பழங்குடி மக்கள் வேட்டையாடப் பட்டிருக்கிறார்களென. மணிப்பூர் என்றில்லை, வடகிழக்கில் குவிந்துள்ள இயற்கை வளங்களை சூறையாட இனி இந்திய முதலாளிகள் எந்த வன்முறைகளையும் செய்யத் தயங்கமாட்டார்கள். நீங்கள் சுற்றுலாப் பயணிகள் என்றால் உங்களுக்கு மேகாலயாவும் மணிப்பூரும் மிஸோரமும் நாகலாந்தும் நீங்கள் பயணிக்கும் இன்னொரு புதிய இடம். நீங்கள் ஊர் சுற்றியென்றால் அந்த மக்களின் வலிகளைப் புரிந்துகொண்டு அரசியல் ரீதியாக அவர்களோடு கைகோர்த்து நிற்கலாம், உங்களால் நாடோடியாக முடியுமென்றால் அந்த மக்களோடு சில காலம் வாழ்ந்து அவர்களின் வரலாற்றை ஆவணப்படுத்த முயற்சிக்கலாம்.

மில்வாக்கி மாநகரத் தமிழ்ச் சங்கம்





மில்வாக்கி மாநகரத் தமிழ்ச் சங்கம் நடத்திய மழலைத் திருவிழா "கிட்ஸ் ஃபெஸ்ட் 2023", செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதியன்று சிறப்பாக நடைபெற்றது. பனிரெண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்காக பிரத்தியேகமாக நடந்த இந்நிகழ்ச்சியில், மாறுவேடப் போட்டி, கைவினைப் பொருட்கள் செய்யும் பயிற்சி, ஓவியம் வரைதல் பயிற்சி, புகைப்பட குடில், ஜூம்பா நடனம் ஆகியன இடம் பெற்றன.

அக்டோபர் 29 ஆம் தேதி மில்வாக்கி மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம், நியூ பெர்லின் நூலகத்தில் நடைபெற்றது. பல உறுப்பினர்களும் கலந்து கொண்டு வருங்காலத்தில் சங்கத்தின் வளர்ச்சிக்கான பல கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மில்வாக்கி மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் அடுத்த நிகழ்ச்சி டிசம்பர் மாதம் 2 ஆம் தேதி சிறப்பாக நடந்தது. சங்க உறுப்பினர்கள் தங்கள் திறமைகளை மேடையேற்றிய மாபெரும் திருவிழாவாக தீபாவளி, கிறிஸ்துமஸ், மிலாதுன்நபி கொண்டாட்டம், நேதன் ஹெல் பள்ளியில் மதிய விருந்துடன் மிகவும் உற்சாகமாக அரங்கேறியது.

யாருமற்ற சிலுவை

அறுசுவை உண்டி அழகு குன்றாத வீடு
அத்தனையும் பார்த்துச் செய்தாலும்
சம்பாதிக்காதவள் எனும்
உதாசீனக் குரலில் தொலையும் முகங்கள்
நிலைக் கண்ணாடிகளில் கூட
மீண்டும் தலைக் காட்டுவதில்லை

முன்பின் தெரியாத ஒருவரின் மனைவியாய்
குலப் பெருமையை பெண்ணிடம் சுமத்தும்
சமூகக் கட்டுப்பாடுகளில் சிக்கி
மீளாத தருணங்களில்
விடைபெறும் சுயத்தை
மீண்டும் கண்டெடுக்கவே முடிவதில்லை

உன்னுடைய நாள் எப்படி இருந்தது
உனக்கு என்ன வண்ணம் பிடிக்கும்
நீ விரும்பிய உணவினைச் சொல்
நீ யாராக வேண்டும் என்று நினைத்தாய்
நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயா
கேள்விகளை அடுக்கும் மகளிடம்
எப்படிச் சொல்வேன்
கூண்டுக் கிளிகள் உயரம் அளந்ததில்லை
மீன்களின் கண்ணீரை உலகம் அறிந்ததில்லை
எல்லாரின் விருப்பதிற்கும் பாத்திரமாய்
யாருடையோ வாழ்க்கையையோ வாழும் நான்
மனித உருவில் பொம்மையென்று

உயிர்வாழ்தலோ தேவனாவதோ
இங்கு நிபந்தனைக்கு உட்பட்டது
பெண்ணுலகில் சிலுவைகள்
கடவுளன்றி இருக்கட்டும்
மறைந்தபின் உயிர்த்தெழா
சுதந்திரமாவது கிடைத்துவிட்டு போகட்டுமே

கவிஞர்
இரம்யாரவீந்திரன்

வீட்டின் அறைகளில் ஒலிக்கும்
அதிகாரக் குரல்களில் ஒடுங்கி
குளிரூட்டப்பட்ட காற்றோடு வெளியேறும்
கருத்துச் சுதந்திரக் குரல்கள்
பின்னெப்போதும் எழுவதேயில்லை

துரோகத்தின் பெருஞ்சுமை அழுத்தி
தோற்றுவிக்கும் கண்ணீரை மறைத்து
நெஞ்சுரம் என உரைத்தாலும்
மரத்த உள்ளத்தில் ஈரம் மீண்டும்
துளிர்ப்பதேயில்லை

FeTNA 37th TAMIL CONVENTION - 2024

Presented by :

FEDERATION OF TAMIL SANGAMS OF NORTH AMERICA & SAN ANTONIO TAMIL SANGAM (TEXAS)

Fetna's International Tamil Entrepreneurs Network

Presents

Global Tamil Entrepreneurs Summit

Empowering emerging Entrepreneurs and fostering technology & Innovation

Date : January 19th, 2024

Place : Kailasapathy auditorium,

University of Jaffna

Yazhpanam, Sri Lanka

Register @ https://fetna.org/fiten-yarl

FITEN
FeTNA International Tamil Entrepreneur Network

8726 Whisper Gate
San Antonio,
TX 78015

+1 2109 045 052

www.fetna.org
www.satamilsangam.org
contact@satamilsangam.org

'Let's unite together for Tamil as Tamilians'

சிறுகதை

பயணம் 22

எழுத்தாளர் அம்பை



தொகுப்பு: சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை
காலச்சுவடு பதிப்பகம் *(ஜனவரி 2022, இரண்டாம் பதிப்பு)*

ஆரஞ்சு இலைகளுடன் இலையுதிர்கால மரம் ஒன்று அவள் சன்னலின் வெளியே இருந்தது. பனி பெய்யும் பின்னணியில் கடுங்குளிரில் அந்த ஆரஞ்சு இலைகளும் பனியையும் இலைகளையும் தாங்கி நின்ற மரமும் உற்ற துணைபோல் இதமளித்தன. துர்குவுக்கு வருவது திட்டமிட்டப் பயணமாய் அமையாமல் தற்செயலாகத்தான் நேர்ந்தது.

மரியாதான் அது குறித்துக் கூறினாள். அருகேயே இருக்கும் ஃபின்லாந்தில் ஒரு புத்தகச் சந்தை நடைபெறப்போவதாகவும் அவள் நிறுவனத்தின் புத்தகங்களை அங்கு விற்பதற்கு வைக்கலாம் என்றும். தன் நிறுவனத்தின் புத்தகங்களுடன் மரியா அங்கு போவதாக இருந்தாள். இவளுக்கான அழைப்பையும் அங்கு தங்குவதற்கான ஏற்பாடுகளையும் அங்கிருந்து ஃபின்லாந்து புத்தகச் சந்தையைப் பிரபலப்படுத்த வந்திருந்த ஒருவர் மூலம் செய்துவிட்டாள். ஸ்வீடனிலிருந்து கப்பலில் செல்வதாக ஏற்பாடு. ஸ்வீடனில் நடைபெற்ற புத்தகச் சந்தையில் தன் நிறுவனத்தின் சார்பாக இவள் வந்திருந்தாள்.

மரியாவின் நட்பு கிடைத்தது தவிர வேறு எதுவும் முக்கியமாக நேரவில்லை. இந்தியப் பெண்கள் குடும்பத்தில் வன்முறை மற்றும் ஒடுக்கப்படுவது குறித்து முக்கியமாகப் பேசுவதோடு பாதுகாப்பில்லாத நகரங்கள், பெண் சிசுக்கொலை, வரதட்சிணைக் கொடுமை, சாதிக் கொடுமை இவற்றைப் பற்றியே பேச வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அவை பேசவேண்டிய விஷயங்கள்தாம். ஆனால் கலோனிய காலங்களில் இந்தியா பாம்புப் பிடாரர்களும் தெருவில் வித்தை செய்பவர்களும் புலிகளும் யானைகளும் உள்ள நாடு என்ற பிம்பம் இருந்தது போய் இப்போது அது பெண்களை அடிமைப்படுத்தி ஒடுக்கி வன்புணர்ச்சி செய்யும் நாடு என்ற பிம்பம் வந்துவிட்டதோ என்று தோன்றியது. சாதாரணமாகப் பேசும்போதுகூட "உங்கள் திருமணம் பெற்றோர்கள் ஏற்பாடு செய்ததா?" என்று கனிவாகக் கேட்டார்கள். கணவன் மனைவியை அடிப்பதை எதிர்த்துப் போராட்டம் செய்து வெற்றி கண்ட, நட்சத்திர அந்தஸ்து உடைய போராளியும் வந்திருந்தார். அவர்கள் எல்லோரும் ஒன்றாகத்தான் தங்கியிருந்தார்கள் ஒரு வீட்டில். காலையில் எழுந்ததும் சாப்பாட்டு மேசை அருகே அமர்ந்து தேநீர் யாராவது கொண்டுவந்து தர வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அவள்தான் முதல் நாள் தேநீர் தயாரித்துத் தந்துவிட்டுப் பிறகு தேநீர் தயாரிக்க எல்லா

வாழ்த்துவோம் வாரீர்!!

எழுத்தாளர் அம்பையின் இயற்பெயர் சி.எஸ்.லட்சுமி என்பதாகும். கோயம்புத்தூரில் நவம்பர் 17, 1944 அன்று பிறந்தார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் இளங்கலையும் , வரலாற்றில் முதுகலைப் பட்டமும் டெல்லி ஜவகர்லால் பல்கலைக்கழகத்தில் அமெரிக்கன் ஸ்டடீசில் முனைவர் பட்டமும் பெற்றவர். இந்தியும், கன்னடமும் அறிந்தவர். தமிழில் பெண்ணியம் சார்ந்து எழுதிய முதன்மைப் படைப்பாளி என விமர்சகர்களால் கருதப்படுபவர். பெண்ணியக் களச்செயல்பாட்டாளர். சமூகவியல் ஆய்வாளர். ஆங்கிலத்தில் சி.எஸ்.லக்ஷ்மி என்னும் இயற்பெயரில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியவர்.2008 ஆண்டில் கனடா இலக்கியத் தோட்டம் இயல் விருது பெற்றவர். அவருடைய "சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை" என்ற சிறுகதைத் தொகுப்புக்காக 2021 ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார். 2023 ஆண்டு டாடா வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதினைப் பெற்றுள்ளார். இந்திய அளவில் இலக்கியத்தில் அவருடைய பங்களிப்பினைப் பாராட்டி இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவருடைய இந்தச் சாதனையைக் கொண்டாடுவதில் பேரவையின் அருவி மலர்க் குழு மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறது.

வசதிகளும் இருப்பதைக் காட்டினாள் அவருக்கு. "சரிதான். வீட்டில் என் மருமகள் செய்வாள்" என்று கூறினார். அவரைப் பேட்டி காண வந்தவர்கள் "உங்கள் கணவர் உங்களை அடிப்பாரா?" என்றுதான் முதலில் கேட்டார்கள். அவரிடம் ஒரு சோகக் கதை இருப்பதுபோலவும் அதை வெளியே கொண்டுவருவதுதான் அவர்கள் ஊடக தர்மம் என்பதுபோல். தலையில் அடித்துக்கொண்டார் அவர் இவளிடம் பேசும்போது. "அந்த மனுஷன் பாவம் ஒரு தடவைகூடக் கையை ஓங்கியது கிடையாது. எலியைக் கூட அடிக்கத் தெரியாத மனுஷன் என்னையா அடிக்க முடியும்? இவங்க என்னன்னா அவரை நான் ஒரு வில்லனா காட்டணும்னு எதிர்பார்க்கிறாங்க" என்றார். இந்தியக் கணவர்கள் அடிக்கும் முறைகள், ஒரு நாளில் எவ்வளவு முறை அடி விழும் என்ற எண்ணிக்கை என்று இப்படியே போயின பேட்டிகள் அந்தப் போராளியிடம். எல்லாவற்றையும் எண்ணிக்கையாக்கும் இந்த முறை அவரைச் சலிப்படைய வைத்தது. தவிர, இந்தியப் பெண்களின் வாழ்வு உய்வு பெற அவருடைய தொண்டு நிறுவனத்துக்கு ஒரு நிதி நல்கும் நிறுவனம் இருபது தையல் இயந்திரங்களை அனுப்பிய கடுப்பில் இருந்தார் அவர். ஒரு பெண்ணும் தையல் வேலை கற்க முன்வரவில்லையாம். கணினிகள் கேட்டார்களாம்.

இது ஒரு பக்கம் என்றால் இன்னொரு பக்கம் "நான் என் மனைவிக்குப் பயப்படுபவன்" என்று நகைச்சுவையாகப் பேசுவதாக எண்ணிக்கொண்டு பேசும் வெளிநாட்டு இந்திய நண்பர்கள். இத்தனையிலும் மரியாவுடன் ஏற்பட்ட நட்பு பெருத்த ஆறுதலாக

இருந்தது. பெண்கள் காலம் காலமாக நடத்தப்படும் விதம்குறித்துத்தொடர்ந்துகேள்விகேட்டுக்கொண்டிருந்த ஒருவரிடம் மரியா கேட்டாள்: "நீங்கள் கொஞ்சம் ஐரோப்பா பக்கமும் பார்வையைச் செலுத்தலாமே? உங்களுக்குத் தெரியுமா, பிரெஞ்சு ராணிகள் தங்கள் குழந்தைகளைப் பொது வெளியில்தான் பிரசவித்தார்கள் அது முறையான வகையில் பிறந்த குழந்தை என்பதை நிரூபிக்க. பிரெஞ்சு ராஜாக்களும் எல்லோர் கண் முன்னாலும்தான் சாக வேண்டும் உடல்நிலை சரியிலாமல் போனால். மக்கள் சுற்றி நின்று பிரார்த்தனை செய்வார்கள். பதினைந்தாம் லூயி அம்மை போட்டி இறந்ததால் அறையில்தான் இறந்தார். அவருக்குப் பத்து குழந்தைகள். எட்டு பெண்கள். இரண்டு பிள்ளைகள். எஞ்சியிருந்த அவர் நாலு பெண்களும் அரசுக்கு நிதிரீதியாக பெரிய சுமையாகப் போவார்கள் என்று நினைத்த அரசவை உறுப்பினர்கள் அவருடைய நாலு பெண்களையும் பதினைந்தாம் லூயியின் வெகு அருகே போகச்சொன்னார்கள். அவர்களுக்கும் அம்மை வந்து சாகலாமே, அரசுக்கும் பணம் லாபமாகுமே என்ற நல்லெண்ணம்தான்! ஆனால் அந்தப் பெண்களுக்கு அம்மை போட்டவில்லை என்பது வேறு விஷயம். இந்தியாவில் ராணிகள் ஆண்டிருக்கிறார்கள். ரீஜெண்ட் ராணிகளாக இருந்திருக்கிறார்கள். போருக்குப் போயிருக்கிறார்கள்."

கேள்வி கேட்டவர் மெல்ல நகர்ந்துபோனார்.

மரியா தன் வாழ்க்கைக் கதை பற்றியும் சுவையாகப் பேசுவாள். உழைக்கும் வர்க்கத்திலிருந்து வந்தவள் அவள். மரியாவின் அப்பா ஒரு விறகுவெட்டி. பிறகு கட்டடத் தொழிலாளியாக இருந்தார். அதன்பின் பெரிய தொழிற்சாலையில் இருந்த பெரிய அடுப்புகளில் நிலக்கரி அள்ளிப்போடுபவராக இருந்தார். மரியாவின் அம்மா கூலிக்குத் தைத்த தையல்காரி. நன்றாகப் பாடுவாராம். மக்கள் பாடல்களைப் பாடிக்கொண்டு தைப்பாராம். சோகமான பாடல்கள். மனநிலை பாதிக்கப்பட்ட சிறுமி ஒருத்தி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இறந்துபோவதைப் பற்றி ஒரு பாடலாம். மரியாவின் அம்மா அதைப் பாட பாட மரியாவும் அவள் அக்காவும் அழுவார்களாம்.

ஐயேனா என்ற கிராமத்தில்தான் ஜனவரி மாதம் பிறந்தாள் மரியா. கிராமத்தில் குழாயில் வரும் தண்ணீர் கிடையாது. கழிப்பறையிலும் தண்ணீர் இருக்காது. மரியா பிறந்தபோது பனி கொட்டிக்கொண்டிருந்தது. பிரசவம் பார்க்க வந்த மருத்துவச்சி பனிச்சறுக்குக் கட்டைகளில் சறுக்கிக்கொண்டு வந்தாளாம். அவள் வருவதற்குள் மரியா பிறந்துவிட்டாள். வருடம் 1945.

ஸ்டாக்ஹோமிலிருந்து அமோரெல்லா என்ற கப்பலில்தான் ஃபின்லாந்து செல்ல ஏற்பாடாகியிருந்தது. பத்து தளங்கள் இருந்த கப்பல். அவள் கடைசி நிமிடத்தில் சேர்க்கப்பட்டதால் நங்கூர தளம் என்று கூறப்பட்ட கப்பலின் கீழ்த்தளத்தில்தான் அவளுக்கான அறை இருந்தது. அந்தச் சிறு கூடு போன்ற அறையில் நின்றாலும் படுத்தாலும் காலின் கீழே அலைகள் பாய்வதுபோல் இருந்தது. இங்கும் அங்கும் தள்ளியது. எழுந்துபோய் பத்தாவது தளத்தை அடைந்து தளத்தின் மூடிய கதவின் வெளியே இருந்த கூரையில்லாத திறந்த வெளிக்குப் போனாள். கரிய கம்பளமாய்க் கிடந்தது கடல். நிலவு தெரியவில்லை. தாரகைகளும். எட்டிப் பார்த்தபோது கீழே கரிய திமிங்கலங்களாய் எழும் அலைகள்.

அந்தக் கருங்கடல் காட்சிக்குப் பின் இந்த ஆரஞ்சு நிற சுகம்.

அவர்களைத் தங்க வைத்திருந்த இடம் கிறித்துவ கன்யாஸ்திரீகள் நிர்வகிக்கும் கன்னிமடம். முதியவர்களுக்கான ரிட்ரீட் தியான ஏற்பாடுகளைச் செய்யும் மடத்தில் அறைகளும் இருந்தன. ரிட்ரீட்

"தமிழ் இன்பம்"

சாகித்ய அகாதமி இந்திய அரசினால், மார்ச் 12, 1954-இல் தொடங்கப்பட்ட ஓர் அமைப்பு. அது இந்திய மொழிகளில் இலக்கியமும் இலக்கியம் சார்ந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் எண்ணத்தோடு தொடங்கப்பட்டது. இதுவரை ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட இலக்கிய கூட்டங்களும், பயிற்சி முகாம்களும் மற்ற பிற இலக்கியம் சார்ந்த நடவடிக்கைகளை நடத்தியுள்ளது. முதன்முதலாக 1955-ஆம் ஆண்டில் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களுக்கு “தமிழ் இன்பம்” என்னும் கட்டுரைத் தொகுப்பிற்கு ரூபாய் 5,000 வழங்கப்பட்டது.

இல்லாத நாட்களில் வாடகைக்கு விடப்பட்டன.

அவளுக்கு ஏற்பட்ட முதல் ஆனந்த அதிர்ச்சி வரவேற்பறையில் இருந்த இந்தியக் கன்யாஸ்திரீ அவர்களை ஃபின்னிஷ் மொழியில் வரவேற்றது. மற்றவர்கள் அவரவர் அறைச் சாவிகளைக் கொண்டுபோனபின் சற்றுத் தயங்கி நின்றாள்.

"நீங்கள் இந்தியரா?" என்று மெல்லக் கேட்டாள்.

"ஆமாம். மங்களூர்" என்றார் சுருக்கமாக.

அறைக்குப் போனதும் படுக்கையைத் தட்டிப்போடவும் எல்லாச் சாதனங்களும் இருக்கும் இடங்களைக் காட்டவும் வந்த கன்யாஸ்திரீயும் இந்தியாவிலிருந்துதான் வந்தவர். சின்னப் பெண்ணாக இருந்தார். அறையைக் கூட்டிவிட்டதாகவும் மறுநாள் சுத்தப்படுத்த வேண்டுமென்றால் கூப்பிடும்படியும் ஆங்கிலத்தில் கூறினார். அவரும் மங்களூரிலிருந்து வந்தவர்தான். அந்தக் கன்னிமடத்தில் இருந்த எல்லோருமே இந்தியக் கன்யாஸ்திரீகள்தாம் என்றார்.

அவளுக்குக் கன்னடம் தெரியும் என்றதும் முகத்தில் ஒரு பெரிய புன்னகை தோன்றியது.

ஐரோப்பாவில் பல பகுதிகளில் அதிகம் பெண்கள் இப்போது கன்னிமடங்களில் சேர முன்வருவதில்லை. இந்த மாதிரி இடங்களை நடத்த ஆட்கள் தேவைப்படுகின்றனர். கேரளம், மங்களூர் போன்ற இடங்களிலிருந்து நிறையப் பெண்கள் கன்யாஸ்திரீகளாக வாழ வருகின்றனர்.

இந்த வேலை செய்யத்தான் வருவோம் என்று அவருக்கு முன்கூட்டியே தெரியுமா?

இது வேலை இல்லை. ஏசுவுக்குச் செய்யும் சேவை. இங்கு எல்லோருமே மங்களூர்க்காரர்கள்தாம். ஏழைக் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். தங்கள் பெண்களை ஏசுவின் சேவைக்குத் தர எல்லாப் பெற்றோர்களுக்கும் சம்மதம்தான். ஆனால் அவர் என்னவோ வெளிநாட்டில் படிக்கலாம், கல்வித் துறையில் இருக்கலாம் என்று நினைத்துத்தான் வந்தார். இங்கு ஏசுவுக்காக இருக்கிறார். குளிர்காலத்தில் எலும்புவரை பாயும் கடுங்குளிர். பிறகு ஃபின்னிஷ் மொழி. அப்புறம் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்.

அவர்களுக்கென்ன?

அவளுக்குத் தெரியாதா அதைப் பற்றி? இவர்களுக்குச் சிரிக்கத் தெரியாது. கஷ்டப்பட்டுத்தான் சிரிப்பார்கள். நகைச்சுவையாகச் சொல்வார்கள், ஃபின்களிடம் சனிக்கிழமை எந்த நகைச்சுவைத் துணுக்கையும் சொல்லக்கூடாது; அவர்கள் அதற்கு ஞாயிற்றுக்கிழமை தேவாலயப் பிரார்த்தனையின்போது சிரித்துத் தொலைப்பார்கள் என்று! கன்னடத்தில் சொல்லிவிட்டுச்

சிரித்தார் அந்த இளம் கன்யாஸ்திரீ.

வெகுநாட்கள் கழித்துச் சிரித்தார் போலும். நினைத்து நினைத்துச் சிரித்தார்.

மறுநாள் சாமான் எல்லாம் கட்டிவிட்டுக் கிளம்பும்போது மெல்ல வந்து, "இவ்வளவு சீக்கிரம் போகணுமா?" என்றார் கன்னடத்தில்.

"மத்தே யாவாகா பருத்தீரா?" என்று திரும்ப எப்போது வருவாள் என்று கேட்டதும், "மூலையில் இருக்கும் இங்கே வர எனக்கு எப்படி முடியும்? அந்த வாய்ப்பே கிடையாது. உங்களை மாதிரி ஏசு சேவை செய்ய வந்தால்தான் உண்டு" என்றாள்.

கையிலிருந்த நீளமான பிடி வைத்த துடைப்பத்தை சுவரில் சாத்திவைத்துவிட்டுத் தன் அங்கியின் பையிலிருந்து ஒரு தபால் உறையை எடுத்தார். "இதை நீங்கள் இந்தியா போனதும் தபாலில் போட முடியுமா?" என்றார். "ஸ்டாம்புக்கான பணம்" என்று சில்லறையை நீட்டியதும் அவள் தடுத்தாள்.

"பேடா, ஸிஸ்டர். நான் போஸ்ட் பண்ணிடுவேன்" என்றாள்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஊர் போக முடியும். தன்னுடைய ஊரை "நன்ன ரக்தா" (என் ரத்தம்) என்றார். சில ஆண்டுகளுக்கு முன் போயிருந்தபோது அவர் வந்த வண்டியின் மேல் கல்லை விட்டெறிந்தார்களாம் யாரோ சிலர். எதற்கு என்று புரியவில்லை என்றார். யாரோ பஜ்ரங் தல் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களாம். இங்கே இந்தக் குளிரில் வேலை செய்து களைத்துப்போய் வந்தால் அங்கே கல்லெறிகிறார்கள். யாத்தக்கே, ஏன், என்று கேட்டார்.

கையில் இருந்த தபால் உறையுடன் அந்தச் சின்னப் பெண்ணை அணைத்துக்கொண்டாள். "இதைக் கட்டாயம் மறக்காமல் போஸ்ட் செய்வேன் ஸிஸ்டர் " என்றபடி.

சன்னல் வெளியே ஜொலிக்கும் ஆரஞ்சு இலைகளுடன் பனி போர்த்திய மரம் தெரிந்தது.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் நவம்பர் 5, ஞாயிறு அன்று குழந்தைகள் நாள் விழா கொண்டாடியது. விழா நாளன்று காலை 11 மணி முதல் இரவு 8 மணி வரை நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கலந்து மகிழ்வுடன் தமிழுறவுகளைக் கண்டு, பேசி, உண்டு உறவாடி மகிழ்ந்தனர். வழக்கம் போலவே 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் மேடையில் கைகளைக்கூப்பி, முறையாகத் தமிழ்த்தாய் வாழ்த்து, மற்றும் திருக்குறள் மறையோதல் பாடி விழாவைத் தொடங்கி வைத்தனர். குழந்தைகளின் மாறுவேடப் போட்டி, குழந்தைகளின் சதுரங்கப்போட்டி,பேச்சுப்போட்டி என்று தொடர்ந்து விழா மிகவும் சுறுசுறுப்பாகவும், விறுவிறுவப்பாகவும் நடந்தேறியது. பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் வழங்கிய நடன நிகழ்வுகள் ஒரு கண்கொள்ளாக்காட்சி போல் இருந்தது. திருக்குறளின் பெருமை பாடுவோம் என்ற 10 குழந்தைகள் பாடிய சேர்ந்திசைப்பாடல் நோக்கர்களைத் திருக்குறள் படிக்க ஊக்குவிக்கும்வண்ணம் இருந்தது. 1500 குழந்தைகள் தமிழ் பயிலும் வாசிங்டன் வாட்டாரத்தில் உள்ள 6 தமிழ்ப்பள்ளிகள் ஒன்றாக இணைந்து நடத்திய தமிழ்ப்பள்ளிகளின் சங்கமம் அணிவகுப்பு நிகழ்வு, விழா அரங்கில் அமர்ந்திருந்த அனைவரின் கவனங்களையும் ஈர்த்தது என்பது விழாவில் நடந்த முத்தாய்ப்பான நிகழ்வுகளின் ஒன்று! டிசம்பர் 3 அன்று தமிழ்ச்சங்கத்தின் 15ஆம் ஆண்டு தமிழிசை விழா கொண்டாடப்பட உள்ளது. 2024 சனவரியில் பொங்கல் விழா நடைபெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சார்லட் தமிழ்ச் சங்கம்

சார்லட் தமிழ்ச் சங்கத்தின் கைப்பந்து மற்றும் வீச்சுப்பந்து போட்டி முதன் முறையாக சார்லட் மாநகரில் செப்டம்பர் 9 ஆம் தேதி அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் இருபதுக்கும் மேற்பட்ட அணிகள் மிக உற்சாகமாகக் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சியில் சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டு கைப்பந்து மற்றும் வீச்சுப்பந்து விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தினர்

இந்தப் போட்டிகளைத் தொடர்ந்து செப்டம்பர் 17 ஆம் தேதி அன்று சார்லட் தமிழ்ச் சங்கத்தின் கோடை கொண்டாட்ட நிகழ்ச்சி நெவின் பூங்காவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறுவர்களுக்கானப் போட்டிகள், பெரியோர்களுக்கான வினாடி வினா நிகழ்ச்சி போன்ற பல நிகழ்வுகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து பல தன்னார்வலர்கள் தங்கள் இல்லத்திலிருந்து கொண்டு வந்த சுவையான மதிய உணவினை பகிர்ந்து உண்டு களித்தனர்.

நாம் வாழும் சமுதாயத்தின் தொடர் வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வண்ணம் சார்லட் நகர தமிழ்ச் சங்கத்தின் இளைஞர் குழு *"Adopt-A-City Street Program" (Adopt-A-City Street Program, Keep Charlotte City Streets Litter free)* என்னும் சார்லட் நகரைத் தூய்மைப்படுத்தும் தன்னார்வலத் தொண்டுப் பணியில் நவம்பர் 4 ஆம் தேதி அன்று பங்குகொண்டனர்.

உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் இசைத் திறனை பெளிப்படுத்தும் நோக்கத்தில் வானம்பாடி இசைக் குழு சார்லட்

தமிழ்ச் சங்கத்தின் ஓர் அங்கமாக இந்த ஆண்டு துவக்கத்தில் தொடங்கப்பட்டது.

வரும் டிசம்பர் 10 ஆம் தேதி அன்று "வானம்பாடி" இசைக் குழுவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

"நம்மால், நமக்காக நடத்தப்படும் சங்கம்" என்பதை என்றும் நினைவில் கொண்டு சார்லட் நகர தமிழ்ச் சங்க செயற்குழு எதிர்வரும் 2024 ஆம் ஆண்டிற்கான பொங்கல் நிகழ்ச்சிக்கான பணிகளில் முழு மூச்சாக இயங்கி வருகிறது.

மிச்சிகன் தமிழ்ச் சங்கம்

மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தை பொறுத்தளவில் கலை, கலாச்சார, பண்பாட்டு நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது, நம்முடைய தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டிற்காக உழைத்த, அதாவது மொழி, மண்ணுரிமை, பெண்ணுரிமை, சமூக நீதி போன்றவற்றிற்காகப் போராடிய அனைத்துத் தலைவர்களின் தொண்டறச் செயலை அடுத்த தலைமுறை குழந்தைகளிடம் கொண்டு செல்லும் எண்ணத்தில் குழந்தைகளுக்கானப் பேச்சுப் போட்டி நிகழ்ச்சியை நடத்தினோம். மேலும் இந்நிகழ்ச்சியை மகாகவி பாரதியார், வ.உ. சிதம்பரனார், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், முத்துலட்சுமி அம்மையார் போன்ற தலைவர்களை மையப்படுத்தி அக்டோபர் 6 ஆம் நாள் நடத்தலாம் என்று செயற்குழுவால் முடிவு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மிச்சிகன் மாகாணத்தில் உள்ள குழந்தைகள் பேரார்வத்துடன் கலந்து கொண்டு மிகச் சிறப்பாக பேசினார்கள். நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கவிஞர் சுகர்தாராணி அவர்கள் பங்கேற்று மிகச் சிறப்பாக நிகழ்ச்சியை முன்னெடுத்துச் சென்றார்கள். நிகழ்ச்சியில் சிறப்பாகப் பேசிய குழந்தைகளுக்குப் பரிசுகளும் அறிவிக்கப்பட்டது.

கம்பர் ஒரு கவிச்சித்தர்

திரு. இராம்துரை பாலசுப்ரமணியன்

இந்திய நாட்டின் மிகச்சிறந்த புலவர்கள் பலர் தங்கள் உண்மையான பெயர் இன்னதென்று தெரிவிக்கும் குறிப்பேதும் நூல்களில் இடம்பெறவில்லை. நம் கட்டுரை நாயகரான கம்பரும் இதற்கு விதிவிலக்கல்ல. கம்பர் தாம் வாழும் காலத்திலேயே கம்பன் அல்லது கம்பநாடன் என்று அழைக்கப்பட்டார்.

கம்பர் 9 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் தமிழ்நாட்டின் கலாச்சார செழிப்பான தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தேரழுந்தூர் என்ற கிராமத்தில் பிறந்தார் என்ற குறிப்பு அவர் பாடிய சடகோபர் அந்தாதியில் வரும் 'மன்றே புகழும் திருவழுந்தூர் வள்ளல்' என்னும் பாடல் வரியால் அறிந்துகொள்ளலாம்.

இவர் இயற்றிய புகழ்பெற்ற 'கம்ப ராமாயணம்' தமிழ் இலக்கியத்தின் மிகச்சிறந்த காவியமாகக் கருதப்படுகிறது. கம்பரின் இந்தக் காவியம் அதன் சுவையான எழுத்து நடையால் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. "சிலையெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது மற்றும் மும்மணிக்கோவை" போன்ற பல நூல்களையும் இயற்றியுள்ளார்.

திரு. இராம்துரை பாலசுப்ரமணியன்

சிறந்த புலமை, கவித்துவம், ஓசை நயம், இயற்கையை உற்று நோக்கும் திறன், கற்பனை வளம், வர்ணனைத் திறன், காட்சி அமைப்பு, பாத்திரப்படைப்பு, எண்ணியதை எண்ணியவாறு சொல்லுகின்ற ஆற்றல் போன்ற பல தனிச்சிறப்புகள் கம்பரிடத்தில் காணப்பெற்றதால் அவரை "கவிச்சக்கரவர்த்தி கம்பர்" என்று அழைக்கிறோம்.

கம்பரின் கவிதை வரிகளில் குவிந்துள்ள சொற்கள் களஞ்சியமாய் திகழ்கின்றன. சூழல், காலம், நோக்கம் போன்றவற்றை

கருத்தில் கொண்டு வடிக்கப்பட்ட கம்பராமாயணப் பாடல்கள் பலராலும் ஆய்வு செய்யப்பட்டு இன்றளவும் பேசப்பட்டு வருவது மிகச் சிறப்பு. கம்பரின் புலமையை தனித்துவத்தை எடுத்துரைக்க பல நூல்கள், கட்டுரைகள் வேண்டும், அவற்றுள் சிலவற்றை உங்கள் பார்வைக்கு கீழே தொகுத்துள்ளேன்.

கம்பரின் கவி நயமும், சொல்லாடலும்:

கம்பராமாயணத்தில் அனைத்துப் பாடல்களிலும் விரவிக் கிடக்கிறது, கம்பரின் கவி நயமும், சொல்லாடலும் இனிய ஓசை நயமிக்க கவிதை வரிகளும். அவை யுகம் யுகமாய் நிலைத்து நிற்கும் ஆற்றல் மிக்கவை என்றால் மிகையல்ல! கணையாழியைக் கண்ட சீதையின் நிலையை கம்பர் எவ்வாறு விவரிக்கிறார் என்று பார்க்கலாம்!

“வாங்கினள்; முலைக் குவையில் வைத்தனள்; சிரத்தால்
தாங்கினள்; மலர்க் கண்மிசை ஒற்றினள்; தடந் தோள்
வீங்கினள்; மெலிந்தனள், குளிர்ந்தனள்; வெதுப்போடு
ஏங்கினள்; உயிர்த்தனள், இது இன்னது எனல் ஆமே? “

(சுந்தர காண்டம், உருக் காட்டு படலம் 66)

பொருள்: சீதை மோதிரத்தைத் தன் கையால் வாங்கினாள், அதைத் தன் மார்பின் மீது பதித்துக் கொண்டாள், தலை மேல் வைத்துக் கொண்டாள், கண்களிலே ஒற்றிக் கொண்டாள், அதனால் அவளது தோள்கள் பூரிக்கப் பெற்றாள், மனம் குளிர்ந்தாள், உடல் மெலிந்தாள், உடலில் தோன்றிய காதல் வெப்பத்தால் ஏங்கினாள், பெருமூச்சு விட்டாள்.

இப்பாடலில் சீதையின் நிலை இத்தகையது என்று சொல்ல முடியுமோ என்று கம்பர் வியக்கிறார்.

அருமை! ‘ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பதற்கிணங்க உள்ளது இப்பாடல். இது போன்று கவித்துவமும், சொல்லாடலுக்கும், உணர்வு வெளிப்பாட்டிற்கும் கம்பரைத்தவிர வேறு ஒருவர் இல்லை. கம்பருக்கு நிகர் கம்பரே!

கம்பரின் காதலும், உணர்வும்:

ராமரின் கையில் உள்ள வில்லின் அழகை வர்ணிக்கிறார், சீதைக்கு? "வாள் கண் நங்கை" என்று விவரிக்கிறார். சீதையின் கண்ணை வாளுக்கு ஒப்பிட்டு ரசிக்கிறார்.

“வரி சிலை அண்ணலும் வாள் - கண் நங்கையும்.

அவருக்குத் தோட்டம் துரவு நிறைய இருக்குது

மேற்சொன்னவாறு பயன்படுத்துவது உண்டு. இதில் ‘தோட்டம் துரவு’ என்ற சொற்றொடரைப் பாருங்கள். தோட்டம் என்றால் தெரியும். பயிர்கள் விளைகின்ற நிலம்தான் தோட்டம். அடுத்துள்ள துரவு என்றால் என்ன ? பலருக்கும் தெரியாது.

துரவு என்பது வற்றாத நீர்வளமுடைய பெருங்கிணற்றைக் குறிக்கும். ஒருவர்க்கு நன்கு விளைகின்ற தோட்டம் உள்ளது. அங்கே நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுகின்ற பெருங்கிணறும் உள்ளது. இவ்விரண்டும் சேர்ந்ததுதான் ‘தோட்டம் துரவு.’

இருவரும் மாறிப் புக்கு. இதயம் எய்தினார்"

ஒருவரது அழகை ஒருவர் விழுங்கியபடி, கண் பார்வை என்னும் கயிற்றால் கட்டி, ஒருவரை மற்றொருவரது மனம் இழுத்து நின்று, கட்டமைந்த வில்லுடைய இராமனும், வாள் போன்ற கண்களையுடைய சீதையும் ஒருவர் மனத்துள் ஒருவர் மாறிப் புகுந்தனர் என்பது பொருள். இப்பாடலில் கம்பர் காட்டும் காதல் ரசம் அவ்வளவு சுவையாய் இருக்கிறது!

மற்றுமொரு சான்று!

"எண்ணரு நலத்தினாள் இணையள் நின்றுழி,
கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."

(பாலகாண்டம்-மிதிலைக் காட்சிப் படலம்-35)

கணக்கில் அடங்காத நற்குணங்கள் உள்ள சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். அவர்கள் கண்கள் ஒன்றை ஒன்று கவ்விக் கொண்டது. அவர்கள் உணர்வுகள் ஒன்று பட்டது. அண்ணலும் நோக்கினாள் , அவளும் நோக்கினாள். காதல் பற்றிக் கொண்டது.

'கண்டதும் காதல்' வருமா? என்று கேட்பவர்களுக்குக் கம்பர் விவரிக்கும் இந்தக் காட்சியே போதுமானது. படிப்பவரின் கற்பனையைத் தூண்டும் ஆற்றல் மிக்கது!

கம்பரின் இயற்கை வர்ணனையும், கற்பனையும்:

கம்பராமாயணத்தில் கம்பர் மருத நிலத்தின் (வயல்) இயற்கை வளத்தைக் கற்பனையோடு வர்ணித்துள்ளார். வயல் பரப்பில் இயல்பாக உள்ளவை எல்லாம் கம்பருக்குக் கற்பனையைத் தூண்டுகின்றன. இயற்கையே அரசனாக அவரது கற்பனையில் உருவாகிறது. இதோ கீழே ஒரு சான்று!

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்திரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ

(பால காண்டம், நாட்டுப் படலம், 4.)

செழிப்பான மருத நிலம் அரசன் அரியணையில் வீற்றிருப்பதைப் போலத் தோன்றுகிறது, கம்பருக்கு. தாமரை மலர்கள் விளக்குகளை ஏற்றி நிற்கின்றன; மேகங்கள் இசைக் கருவிகளை முழக்குகின்றன; மகரயாழ் வாசிப்பது போல வண்டுகள் பாடுகின்றன; நீர் நிலைகளில் எழும் அலைகள் நாடக அரங்கின் திரைச் சீலைகள் போல் காட்சி தருகின்றன; அங்கே மயிலாகிய நாட்டியப் பெண் நடனம் ஆடுகிறாள்; குவளை மலர்கள் போன்ற விழிகளால் மக்கள் விழித்துப் பார்க்கின்றனர்; இவ்வாறான அரசவையில் அரசன் வீற்றிருக்கிறான்.

இவ்வாறாகக் கம்பர் அரசனையும், அரசவையையும், இயற்கையோடு (மருத நிலத்தோடு) ஒப்பிட்டு வர்ணித்துள்ளார்.

கொத்தனார் எப்படி வந்தார் ?

தமிழில் ஒரு சொல்லை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தால் எண்ணற்ற செய்திகள் மழைபோல் பொழிகின்றன. பெருவரலாறும் மக்கள் பயன்பாடும் மிகுந்த மொழிக்குத்தான் அத்தகைய ஆற்றல் உண்டு. அவ்வகையில் இன்று நாம் ஒரு சொல்லை எடுத்துக்கொள்வோம். கொத்து என்பது அந்தச் சொல்.

கொத்து என்பது திரளாய் அமையப்பெற்றது. நிலக்கடலைச் செடி கொத்து கொத்தாய்க் காய்க்கும். தானும் தன்னையடுத்த அனைத்தும் சேர்ந்த திரளே கொத்து. கொத்தாகக் காய்க்கும் அவரைக்காயைக் கொத்தவரங்காய் என்கிறோம். காய்க்கொத்துகள் பலவகை. திறவுகோலாகிய சாவிகளைச் சேர்த்து வைத்திருந்தாலும் அது சாவிக்கொத்து. குடும்பத்தோடு அடிமைப்பட்டவர் கொத்தடிமை எனப்பட்டார்.

கொத்து என்ற ஏவல் பொருள் தரும் சொல் 'கொற்று' என்ற வினைச்சொல்லின் பேச்சுத் திரிபு. உளியால் கற்களைக் கொற்றுவதுதான் சிலை செய்யும் பணி. அவ்வாறு கொற்றுபவர் கொற்றன் எனப்பட்டார். கொற்றன் என்பதன் பேச்சு வழக்கே கொத்தன், முற்காலத்தில் கற்களை உரிய வடிவத்தில் கொற்றி எடுத்துத்தான் கட்டடங்கள் கட்டுவார்கள். கட்டடத் திற்குக் கற்களைக் கொற்றுவதும் சிலை கட்குக் கொற்றுவதுமே கட்டுமானப்பணிகள். அதனால் கட்டடம் கட்டுபவர் கொற்றன் எனப்பட்டார். அதன் பேச்சு வழக்கே கொத்தன், கொத்தனார் என்பது.

இப்படிக் கம்பரின் தனித்துவத்தை பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம்! எண்ணற்ற சான்றுகள் உள்ளன! கம்பரின் பெருமையை இன்றளவும் புகழ்ப் பாட வைக்கும் சொற்றொடர்களைப் பற்றிப் பார்க்கலாம்.

கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும்

ஒருமுறை, கம்பர் வீட்டில் பணிபுரியும் பெண் அவரைப் பார்க்க வந்த சோமாசிப் புலவரின் ஏளனப் பார்வைக்குப் பாடம் புகட்ட, அவள் கேட்ட கேள்வி சோமாசிப் புலவரை பதில் கூற முடியாமல் திக்கு முக்காட வைத்தது. கம்பரிடம் தமிழ் கற்காத, பணிபுரியும் பெண்ணிற்கே இவ்வளவு புலமையா என்ற ஆச்சரியமே ‘கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும்’ என்ற

பழமொழி உருவாக காரணமாக இருந்தது என்ற கருத்து இன்றளவும் அவரின் புகழை விவரிக்கிறது.

"வட்டமாக இருக்கும், வன்னிக்கொடியில் தாவும், கொட்டுபவர் கையில் கூத்தாடும் எரித்தால் சிவ சிவ என்பர் " என்றால் என்ன?

இதுதான் அந்தக் கேள்வி! அவள் தட்டும் சாணியைத்தான் இவ்வாறு கூறினாள் என்று கம்பர் சோமாசிப் புலவருக்கு விளக்கம் அளித்தார். அதாவது வட்டமாக இருக்கும் வரட்டி .வன்னி மரக்கிளைகளால் எரியூட்டுவர்.எரித்து சாம்பலானதும் அது திருநீறு. கூத்தாடும் சிவனுக்குரிய அத்திருநீரைப்பூசும் போது பக்தியால் ’ சிவ சிவ’ என்பார்கள் என்பதுதான் அர்த்தம்.

ஒரு சிலர், கம்பர் நெசவுத் தொழில் பார்த்துவந்தார் எனவும், அவர் கவிச் சக்கரவர்த்தி என்பதால் நெசவுத் தறியின் முன்னும் பின்னும் நகரும் அசைவை இனிமையான இசை எழுப்பும்படி அதனை அமைத்திருந்ததாகவும், அதனால்தான் “கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும்’ என்ற சொற்றொடர் உருவானது என்றும் கூறுவர்!

கம்ப சூத்திரம்:

கம்பன் எழுதியது கதையோ கவிதையோ அல்ல அதில் பல உள் அர்த்தங்கள்,வாழ்க்கைக்குத் தேவையான பல சூட்சமங்கள் உள்ளது என்றால் அது தனிச்சிறப்பு. அதனால் தான் “அது என்ன அவ்வளவு பெரிய ‘கம்ப சூத்திரமா’ “என்று மக்கள் கூறும் வழக்கம் ஏற்ப்பட்டது.

உதாரணமாக, கம்பராமாயணத்தில் வரும் கதாபாத்திரங்கள் - இராமன், இராவணன், சீதை, மண்டோதரி, சூர்பனகை, கைகேயி எல்லாம் யார்? நம் வாழ்க்கையில் நாம் அன்றாடம் சந்திக்கும் பலவித குணாதிசயங்கள் கொண்ட உறவுகளையும், மனிதர்களையும், சூழ்நிலைகளையும், அதை எப்படிக் கையாள வேண்டும், கையாளக் கூடாது போன்ற தத்துவங்களை உள்ளடக்கியுள்ளதுதான் கம்ப சூத்திரம் எனலாம். இத்தகைய உள் அர்த்தத்தை புரிந்து கொள்ளவது கடினம், அதனால் தான் கம்ப சூத்திரம் என்ற சொல் வழக்கு பரவியது. ஆழ்பொருள் அமையப் பாடியிருக்கும் கம்பரின் திறனை இது வெளிப்படுத்துகிறது என்றால் மிகையல்ல!

சிலர் ‘கம்ப சித்திரம்’ (கம்பரின் கைவண்ணம்) என்பதுதான் கம்ப சூத்திரம் என்று பிற்காலத்தில் மருவி விட்டது என்றும் கூறுவர்.

முடிவாக இக்காலத்தில், கண்ணதாசன் அவர்கள்,

“பத்தாயிரம் கவிதைகளை முத்தாக அள்ளி தந்த சத்தான கம்பனுக்கு ஈடு, இன்னும் வித்தாகவில்லை என்று பாடு” என்று கம்பரின் புகழைப் பறைசாற்றியுள்ளார். அதனால்தான் அவரை திரையிசைக் கம்பர் என்றும் அழைத்து மகிழ்ந்தனர்.

எத்தனைத் தலைமுறை வந்தாலும் கம்ப காவியத்தின் கவித்துவத்தில், வர்ணனையில், சொல்லாடலில் மூழ்கடிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் அதில் சொல்லப்படும் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்கும், தேடித்தேடி ரசிப்பதற்கும், சிலாகிப்பதற்கும் ஏதோ ஒன்று வைத்திருக்கிறார் என்று கூறினால் அது மிகையல்ல!. கவிசக்கரவர்த்தி என்ற பட்டம் பல நூறு வருடங்கள் கடந்தாலும் அது கம்பர் ஒருவருக்கு மட்டுமே நிலைத்திருப்பது அவருடைய புலமைக்கும், புகழுக்கும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு!

விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம்

விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தின் முத்தமிழ் விழா அக்டோபர் 22, 2023 அன்று சன் ப்ரைரி மேற்கு மேல்நிலைப் பள்ளியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தலைவர் பவானி தினகரன் அனைவரையும் வரவேற்க முத்தமிழ் விழா இனிதே துவங்கியது. இயல், இசை, நாடக கலை நிகழ்ச்சிகளுடன் விழா நடைபெற்றது. விழாவில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்ற இசை, நடனம், மற்றும் நாடக நிகழ்வு மிக மிக அருமையாக அரங்கேறியது. "கொஞ்சம் நடிங்க பாஸ்" நடிகர் ஆதவன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி சிறப்பித்தார். தமிழ்ச்சங்கத்தின் தலைவர் நடப்பு ஆண்டிற்கான தமிழ்ச்சங்கத்தின் உணவுக்கொடை, புத்தகக் கொடை போன்ற செயல்பாடுகளை உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

நிகழ்ச்சியின் நடுவே ஜனாதிபதியின் தன்னார்வ சேவை விருது பெற்ற மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு விருதுகளுடன் சான்றிதழும் வழங்கப்பட்டது. முத்தமிழ் விழா கலை நிகழ்ச்சியில் பங்குபெற்றவர்களுக்கு நினைவுப் பரிசு அளிக்கப்பட்டது. மதியம் துவங்கிய கலை நிகழ்ச்சிகள் இரவு வரை நடைபெற்றது. முத்தமிழ் விழா கலைகளின் சங்கமமாக மட்டுமல்லாமல் உறவுகளின் சங்கமமாகவும், கண்களுக்கும் காதுக்கும் விருந்தாகவும் கலை விழாவாகவும் அமைந்தது. அனைவருக்கும் அறுசுவை இரவு விருந்தும் அளிக்கப்பட்டது.

முன்னதாக அக்டோபர் 7ம் தேதி அன்று தமிழ்ச்சங்கத்தின் செயல்பாடுகளில் ஒன்றான உணவுக்கொடை மூலம், விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் பயிலும் இந்திய மாணவர்களுக்கு தன்னார்வலர்கள் வீட்டில் சமைக்கப்பட்ட மதிய உணவு வழங்கப்பட்டது.

நியூசெர்சி தமிழ்ப் பேரவை

நியூசெர்சி தமிழ்ப் பேரவையின் "அறிவரங்கம்" தளம் எப்பொழுதும் ஆக்கபூர்வமான மாற்று சிந்தனைகளை முன்னெடுக்கும். அந்த வரிசையில் மாற்று திரைப்பட இயக்குனர் திரு. தங்கர் பச்சான் அவர்களின் "கருமேகங்கள் கலைகின்றன" திரைப்படத்தின் சிறப்புக் காட்சியை திரையிட்டதில் பெருமை கொள்கிறது.

அக்டோபர் மாதம் 7 ஆம் தேதி, எடிசன் நகரில் உள்ள "பிக் சினிமாஸ் " திரையரங்கில் திரையிடப்பட்ட இந்த மாற்று திரைப்படத்திற்கு திரளான தமிழர்கள் வந்திருந்து ஆதரவளித்தனர். சாமானிய மக்களின் யதார்த்தமான வாழ்க்கையை, மண்வாசனையுடன் திரைப்படத்தில் படைக்கும் படைப்பாளி இயக்குநர் தங்கர்பச்சானை நியூசெர்சி தமிழ்ப் பேரவை கொண்டாடுகிறது.

நியூசெர்சி தமிழ்ப் பேரவை, தமிழ் சார்ந்த நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது தமிழர் சார்ந்த நிகழ்ச்சிகளையும் முன்னெடுக்கிறது. அக்டோபர் 14 ஆம் தேதி, சனிக்கிழமையன்று ஆங்கிலப் பேச்சுப் போட்டி மற்றும் குழந்தைகளின் பல்வேறு திறமைகளை மேடையேற்ற "Open Talent Show" நிகழ்ச்சியை ஜெர்சி நகரத்தில் நடத்தியது. பெரும்பாலான மேடை நிகழ்ச்சிகள், பாட்டு மற்றும் நடனத்திற்கு முன்னுரிமை அளிக்கும் நிலையில், அதைத் தவிர்த்து மற்ற திறமைகளை மேடையேற்றிய மன நிறைவை இந்த நிகழ்ச்சி அளித்தது.

வெற்றி என்பது மற்றவர்களை விட முன்னேறுவது அல்ல, அது உங்களை விட முன்னேறுவது. நவம்பர் மாதம் 4 ஆம் தேதி, நியூசெர்சி தமிழ்ப் பேரவை, தன்னுடைய ஐந்தாம் ஆண்டு இலையுதிர் விழாவில் பல்வேறு போட்டிகளை நடத்தியது.

சதுரங்கம், கேரம் போன்ற விளையாட்டுப் போட்டிகள், ஆங்கில பேச்சுப் போட்டி, கலை சார்ந்த ஓவியப் போட்டி என பல்வேறு வகையான போட்டிகளை ஒருங்கிணைத்தது.

போட்டிகள் மட்டுமல்லாது ஓவிய நுணுக்கங்களை கற்றுக் கொடுக்கும் ஓவியப் பயிற்சிப் பட்டறை, நம்முடைய பாரம்பரியத்தை குழந்தைகளுக்கு எடுத்து சொல்லும் கைவினைப் பயிற்சிப்பட்டறை போன்ற நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்தியது. அறுசுவை உணவகத்தின், சுவையான மதிய உணவு உண்ட மயக்கத்தில் இருந்த போது பேரவைத் தலைவர் திரு. சின்னசாமி பாப்பனன் அவர்களின் வரவேற்புரை நித்திரையிலிருந்து எழுப்பியது. மேடை நிகழ்ச்சிகள் தமிழ்த் தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பித்தது.

"தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க அமெரிக்காவில் வளரும் நம் தமிழ்க் குழந்தைகளுக்கு, தாய்மொழியைக் கற்றுக் கொடுக்கும் உன்னதமான பணியைச் செய்து வரும் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளை சிறப்பித்ததில் நியூசெர்சி தமிழ்ப் பேரவை பெருமை கொள்கிறது.

இலையுதிர் விழாவில் பேரவையின் சிறப்பு விருந்தினர் திரு. ஞானசேகரன் செல்லையா அவர்கள் தமிழ்ப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு பரிசு வழங்கி அவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டி உரையாற்றினார்.

தோகை விரித்தாடும் ஆண் மயில் அழகுதான். ஆனால் எம் குழந்தைகளின் இலையுதிர் விழா நடனத்தை விட அல்ல. குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் பங்கு பெற்ற நடன நிகழ்ச்சி விழா வின் உச்சகட்ட மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது.

"Bldg 18" குழுவிலிருந்து திரு ராகவ் மற்றும் திரு மௌலி அவர்களின் நகைச்சுவை நிகழ்ச்சி விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் மகிழச் செய்தது. 2024 ஆம் ஆண்டிற்கான செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களை இயக்குனர் குழுவின் தலைவர் திரு கருப்பையா கணேசன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

பேரவையின் கலைக் குழுவிலிருந்து மீண்டுமொரு படைப்பாக நகைச்சுவை நாடகம் அரங்கேறியது. பார்வையாளர்களின் மகிழ்ச்சி நீண்டு கொண்டே சென்றபோது, பேரவைத் துணைத்தலைவர் திருமதி. சிறிலெட்சுமி கல்யாணசுந்தரம் அவர்கள் நன்றியுரைக்காக மேடை ஏறினார்.இறுதியாக விழாவின் அனைத்து போட்டிகளிலும் பங்கு பெற்ற மற்றும் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நம்முடைய தமிழ் சமுதாயத்திற்கு தேவையான உயிரோட்டமுள்ள நிகழ்ச்சிகளை நியூசெர்சி தமிழ்ப் பேரவை தொடர்ந்து முன்னெடுக்கும் என்ற உறுதியுடன் இந்த இலையுதிர் விழா மனதிற்கு பிடித்த ஒரு இனிய நிகழ்ச்சியாக நிறைவடைந்தது.

சாக்ரமெண்டோ தமிழ் மன்றம்

சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் 36வது பேரவை விழாப் பணிகளை முடித்து, தற்போது பொங்கல் விழாவிற்காக பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, திருக்குறள் போட்டி மற்றும் பகிரும் பொங்கலுக்கான ஆரம்பப் பணிகளைச் செய்து வருகிறது.

சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் பொங்கல் திருவிழாவையொட்டி "பகிரும் பொங்கல்" என்ற நிகழ்வை தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடத்தி வருகிறது. இதன் மூலம், இந்தியா மற்றும் இலங்கையில் பொருளாதாரச் சூழல் காரணமாக தங்களின் வாழ்வாதாரம் இழந்து பொங்கல் திருநாளைக் கொண்டாட முடியாத சூழலில் இருக்கும் குடும்பங்களைத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாகக் கண்டறிந்து, அவர்கள் குடும்பத்தோடு பொங்கலைக் கொண்டாடிட உதவி வருகிறது. பகிர்ந்து உண்ணும் தமிழர்களின் பண்பாட்டை எடுத்துக்காட்டிடவும், தமிழர்களின் திருநாளாகிய பொங்கலைக் கொண்டாட ஊக்கப்படுத்து வதற்காகவும் இதனை மேற்கொண்டு வருகிறது.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டு லரிது – குறள் 227

பொருள்: பலருடனும் பகிர்ந்து உண்ணப் பழகியவனைப் பசி என்னும் கொடிய நோய் தொடுவதும் அரிது.

இந்நிகழ்வை சாக்ரமெண்டோ தமிழ் மன்றத்தில் அறிமுகப்படுத்திய மன்றத்தின் நிர்வாக இயக்குநர் திரு. மகேஷ் பாபு அவர்களுக்கு மன்றம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும் சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் சார்பாக அக்டோபர் 7 ஆம் தேதி திரு. ஒய்.ஜி.மகேந்திரன் குழுவினரின், இசைக் கலைஞரின் வாழ்வியலைப் பற்றிய சாருகேசி என்ற நாடகமும், நவம்பர் 18 ஆம் தேதி திரு. கல்யாண் குழுவினரின் இன்னிசை நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது. இதன் ஒருங்கிணைப் பாளராக திரு. நவீன் பாண்டுரங்கன் மற்றும் திரு. மைக்கேல் சம்பத் ஆகியோர் இருந்து விழாவைச் சிறப்பாக ஒருங்கிணைத் திருந்தனர். விழாவிற்கு வந்தவர்களைச் சாக்ரமெண்டோ தமிழ் மன்ற நிர்வாக இயக்குநர்கள் வரவேற்றனர்.

என் காலதரின் வெளியே

இங்கே காணப்படும் அழகிய பனிக் காட்சிகளை நிழற்படங்களாய் சிறைப்படுத்தி நமது கண்களுக்கு விருந்தாய் அளித்திருப்பவர் புகைப்பட கலைஞர் திரு. இராம்குமார் சுந்தரம் அவர்கள். இவர் நியூயார்க்கில் வசிக்கிறார். இவருடைய புகைப்படங்களில் ஒன்று நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கை நடத்திய போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இவரின் பார்வையில், புகைப்படம் என்பது, "காணொளியின் வரம்புகளை மீறி ஒரு அழுத்தமான கதையை விவரிப்பதாகும்".

புதிர் நிலை விடுகதை

அம்மா சேலையை மடிக்க முடியாது
அப்பா காசை எண்ண முடியாது
அது என்ன?

(விடை - வானம் - நட்சத்திரம்)

என்பதைப் போலவே கீழே உள்ள குறுந்தொகைப்பாடல் அமைந்துள்ளது அளக்கலாகா கூறுகளை விளக்கும் முயற்சியையே புதிர் நிலை விடுகதைகள் என்பர்.

தலைவியைச் சந்தித்து மகிழும் இடத்தைத் தோழியிடம் கேட்கிறான் தலைவன். தோழியோ நேரிடையாகக் கூறாமல் சுற்றி வளைத்துப் புதிர் போடும் முறையில் பதில் சொல்கிறாள்.

ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குரு கல்ல தியாவதும்
துன்னல்போ கின்றாற் பொழிலே யாமெம்
கூழைக் கெருமண் கொணர்கஞ் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

- மாதீர்த்தனார்

FEDERATION OF TAMIL SANGAMS OF
NORTH AMERICA &
SAN ANTONIO TAMIL SANGAM (TEXAS)
proudly presents
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்,
சான் ஆண்டோனியோ (டெக்ஸாஸ் மாகாணம்)
தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும்
பேரவையின் 37வது தமிழ் விழா
FeTNA 37th
TAMIL CONVENTION
JULY 4, 5 & 6 - 2024
THURSDAY, FRIDAY & SATURDAY
FeTNA 37th TAMIL CONVENTION - 2024
will be held @ SAN ANTONIO (TEXAS)
தமிழ் எம் மூச்சாம் எனத் தமிழர்கள் ஒன்றாதல் கண்டே...! கண்டே...!!
'Let's unite together for Tamil as Tamilians'
சான் ஆண்டோனியோ டெக்ஸாஸில் ஒன்று கூடுவோம்
தமிழோடு... தமிழராக...
www.https://satamilsangam.org/

வாரீர்! பேரவையின் 37 ஆவது தமிழ் விழா

சான் ஆண்டோனியோவில்! வாரீர்!

தங்களை வரவேற்க தமிழன்னை காத்திருக்கிறாள் இரு கரம் கூப்பி! பேரறிஞர்களும், மாபெரும் கலைஞர்களும், பல மாநில நட்புக்களும் தமிழ் நெஞ்சங்களும் என 2024 ஜூலை மாதத்தில் களைக்கட்டட காத்திருக்கிறது சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்!

தமிழ் விழா முடிந்து ஊர் வலம் வரலாமோ!-வரலாமே!

என்னென்ன காணலாம்? எல்லாமே காணலாமே!

எழில் கொஞ்சும் சான் ஆண்டோனியோ நதிக்கரை ஓரம் உல்லாசமாய் நடக்கலாம்!

அலங்கரிக்கப்பட்ட படகில் உற்சாகமாய் வலம் வரலாம்!

கரையோரத்தில் கலர்க் கலராய் குடைக் கடைகளையும் காணலாம்!

ஸ்பானிய உணவுகள் பலவகையும் உண்ணலாம்!

பலநூறு கால வரலாறு கொண்ட 'அலாமோ கோட்டையின்' அருமையை காணலாம்!

போர் கண்ட பூமியின் புரட்சிக் கதையையும் அறியலாம்!

வாரீர் சான் ஆண்டோனியோவிற்கு!

குவாதலூப்பே அன்னையின் பெயர் கொண்ட இயற்கையின் கொடையாம் நீண்ட நதியிலும் புத்துணர்ச்சி பெறலாம்!

மெக்சிக்க கலாச்சாரத்தை மெய்மறக்கக் கேட்கலாம்!

அனைவரையும் ஈர்க்கும் 'சி வேர்ல்ட்-கடல் உலகம்' நுழைந்து குதூகலிக்கலாம்!

மிருகக்காட்சி சாலையைக் கண்டு மகிழலாம்!

வாரீர் சான் ஆண்டோனியோவிற்கு!

தமிழ்நாட்டின் சென்னையை 'சகோதரி நகரமாய்' சந்தோசமாய்க் கொண்டுள்ளது சான் ஆண்டோனியோ!

இந்தியாவின் பல மாநில மக்களையும் ஒரு சேரப் பார்க்கலாம்!

வாரீர் இம்மாபெரும் விழாவிற்கு மகிழ்வோடு வரவேற்கின்றோம்

சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து கொண்டாட வாரீர்!

புதியதோர் உலகம் செய்வோம்!

கவிஞர் மருதயாழினி (த.ச.பிரதிபா பிரேம்)

புதியதோர் உலகம் செய்வோம்
கெட்டப் போரிடும் உலகினை
வேரோடு சாய்ப்போம்!

அன்றலந்த மலர்கள்
வண்டாடும் சோலை
தென்றலுக்கு நாணும் மரங்கள்
மண் தவழும் ஓடை !

வகையான வீடு
வாசல் நிறைக் குழவிகள்
வரவேற்கும் இணைகள்
வானம் போல் வாழ்வு!

மண்ணிலே பிறந்த உயிர்
வளமாய் வாழ்வதற்கு
வானும் மண்ணும்
அளித்தக் கொடைகள்
வாழும் வரை இவை
போதுமிங்கே!

வாழும் வரை போதுமா இவை?
போதுமென்ற உளம் கொண்டோர்
மேதினியில் பிறந்துவிட்டால்
மோதி மிதிக்கும் போர் எதற்கு?
நாதியற்ற வாழ்வெதற்கு?

புழுவும் பூச்சியும்
காக்கையும் குருவியும்

முயலும் மானும்
சிங்கமும் புலியும்
யானையும் மாடும்
அரவமும் பட்சிகளும்
ஐந்தறிவுக் கொண்டவையாம்!
மானுடன் சொல்கிறான் அவை
ஐந்தறிவு கொண்டவையாம்!
பாய்ந்து வரும் சிரிப்பை நான்
பதுக்கி வைக்கப் பார்க்கிறேன்
பகடியாய் அது பாரே கேட்கும்படி
உரக்கச் சிரித்தவுடன்தான்
முடிகிறது!

ஆறாம் அறிவைக் கொண்டனையே
மானுடா!
உயிர்கள் வலியைக்
கண்டனையோ?
கேட்டு அடங்குகிறது
நாவு!

என்ன படைத்தாய் புது உலகில்?
ஏது படைத்தாய் மண்ணுலகில்?
மண்ணில் வாழும் உயிர்கள்
இன்னல் இன்றி வாழ்வதற்காய்
என்ன படைத்தாய் இந்தப் புது
உலகில்?
ஏது படைத்தாய் மண்ணுலகில்?

பகுத்துண்டு வாழ்ந்த பாரினை
வகுத்துப் பார்க்க கற்றுக் கொடுத்தாய்!
இருக்கும் இடத்தில் இல்லாததெல்லாம்
தேடி
திரை கடல் ஓடினாய்
திறவுகோல் தேடினாய்!

கைவிரித்து உனையழைத்த அண்டை
நாட்டு
மானுடனுக்கெல்லாம்
திரை விதித்து மகிழ்ந்தாய்!

நீ
இனம் என்றாய்
இன்னல்கள் பிறந்தது
மதம் என்றாய்
மரணத்தின் வாயில் திறந்தது
சாதி என்றாய்
சாக்காடு பூத்தது!

போர் என்கிறாய்
புவியும் அழியுது!

எளியவனை ஏழுலகம் தேடி
வலியவன் அலைகிறான்
சிற்றெறும்பை காட்டானை
மிதிப்பதுவாய் கொன்று போட்டு
ஓய்கிறான் !

தனியொருவன் வேட்கை கொண்டால்
பூக்காடு பூத்த நிலமெங்கும் சடுதியில்
போர்க்காடு ஆகிவிடுகிறதிங்கே!

கொண்ட நல் பகுத்தறிவு கொண்டு
கூடி நின்று வேடிக்கை பார்ப்பர்
ஆறறிவு கொண்ட மானுடப்பதர்கள்!

பாய்ந்து வரும் குண்டுக்குத் தெரியுமா?
பச்சிளம் பிள்ளையைச்
சுமக்கும் தாயென?
பால்மணம் மாறாப்
பிள்ளையென?



குண்டு வெடித்ததும்
தூக்கி எறியப்படுவாள்
எங்கோ ஒரு தாய்
இடுப்பில் சுமந்த குழந்தையோடுதான்
இரத்தம் உறைந்து போன
தாயின் மார்பில் பாலினைத்
தேடி ஓயும் பிள்ளை

கண்ணீர் சுரக்கச் செய்யும் காட்சிதான்
உலகமே கண்டுகொண்டிருக்கிறது
போர்க்களத்தில்!

ஐயோ என்கிறார்கள் மனம் கசிந்தோர்
போரே வேண்டாம் என்கிறார்கள்
இரங்கி நின்றோர்
அமைதிக்காய் நோபல் பரிசினை
வாங்கினார்கள் இன்னும் பலர்!

போர்க்களம் மட்டும் காய்வதாயில்லை
களங்கள் மாறுகின்றன
ஆனால் காட்சிகள்
மாறுவதாயில்லை!

தெறித்து ஓடும் இரத்தம் குடித்த
போர்க்களங்கள்
நீருக்கு மாற்றாய்
இரத்தத்தை கக்கும் நாள்
தொலைவிலில்லை!

எல்லோரும்
எ ல் ல ா மு ம்
கொள்ளவேண்டும்
இல்லாதவன் இல்லாத
நிலை வேண்டும்
பொல்லாதவர் பொடிப் பொடியாய்
போதல் வேண்டும்
தள்ளாதவர் இல்லாத நிலை வேண்டும்!

மேலோர் கீழோர் என்பதில்லை
உயர்ந்தோர் தாழ்ந்தோர்
நிலையும் வேண்டாம்!

நாளும் உதிக்கும் சூரியனும்
தேய்ந்து மறையும் நிலவதுவும்
நாளும் நாளும்
சொல்லிச் செல்வது புரிகிறதா?
ஓர் நாள் வாழும் ஈசலும்
பூத்துச் சிரிக்கும் பூக்களும்
சொல்லிச் செல்வது புரிகிறதா?

நாளை என்பதே நம் கையில்
இல்லையே ?
வானையும் மண்ணையும்
பிளக்கும் போரெதற்கு?
நல்லதோர் உலகம் காணவே
நானிலம் விரும்புவதால்
எல்லா உயிரையும் ஓம்பி
புதியதோர் உலகம் செய்வோம்
கெட்டப் போரிடும் மாந்தரை
வேரோடு சாய்ப்போம்!

நன்றி மறப்பது நன்றன்று!!

“பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது”

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக சாக்ரமெண்டோவில் நடைபெற்ற 36வது பேரவை விழாவிற்காக நேரம் பாராமல், கண் துஞ்சாமல், சோர்வின்றி, தனிப்பட்ட விடயங்களைப் பின்தள்ளி, இவ்விழாவின் பல்வேறு விடயங்களில் ஒரு மனதாக தோள்கொடுத்து, உதவி என்று கேட்டபோதெல்லாம் முகம் கோணாமல், தங்களை ஈடுபடுத்திக்கொண்டு ஒற்றுமையாக பேரவை விழாவிற்காக உழைத்திட்ட 300க்கும் மேலான தன்னார்வலர்களுக்காக சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் இணைந்து கடந்த செப்டம்பர் 16, 2023 அன்று நன்றி நவிலல் விழா ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் பேரவைத் தலைவர் முனைவர் பாலா சுவாமிநாதன் கலந்து கொண்டு தன்னார்வலர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார்.

விழாவில் தன்னார்வலர்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு தங்களின் அனுபவ பயணத்தை பகிர்ந்து கொண்டது நெகிழ்வாக இருந்தது. மேலும் விழாவில் சிறப்பான விருந்து பரிமாறபட்டது. மரபுக்கலை நடன நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. சாக்ரமெண்டோ தமிழ் மன்றச் செயலாளர் திருமதி யாமினி கருணாகரன் வரவேற்புரை வழங்கினார். விழாவின் இறுதியில் 36வது பேரவை விழா ஒருங்கிணைப்பாளர் திரு. ஜான் பிரிட்டோ, இணை ஒருங்கிணைப்பாளர் திருமிகு மலர்மகள் அகிலன் மற்றும் சாக்ரமெண்டோ நிர்வாக இயக்குநர்களும் விழாவில் பங்கேற்றவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி

அன்பெனும் குடில் புகும் அரசே - வள்ளலார்

இசைக்கடல் பண்பாட்டு அறக்கட்டளை

(SANGEETH SAGAR CULTURAL TRUST)

இராசராசன் கல்வி பண்பாட்டுக் கழகம்

மற்றும்

SRM பல்கலைக்கழகம் தமிழ்ப் பேராயம்

பெருமையுடன் இணைந்து வழங்கும்

19-ஆம் ஆண்டு மார்கழி இசை விழா

நாள்: 25.12.2023 திங்கட்கிழமை முதல்
29.12.2023 வெள்ளிக்கிழமை வரை

இசை இயல் நாட்டிய நாடக விழா

29.12.2023 வெள்ளிக்கிழமை

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

இசைக்கடல் பண்பாட்டு அறக்கட்டளையின்
19-ஆம் ஆண்டு விழாவில் வழங்கும்
11-ஆம் ஆண்டு தமிழிசை விழா

தொடர்புக்கு: 9840369596, 8608554333

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
இன்போசிஸ் அரங்கம்
கிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை (ஜோ அலுக்காஸ் எதிரில்)
தி.நகர், சென்னை-600 017.

அட்டைப்பட ஓவியர்கள்

திருமிகு கிருத்திகா ஜோ

பனிமலர் இதழின் முன் அட்டைப்படத்தில் பனிக்கால காட்சி ஒன்றினை நம் கண்முன்னே காட்டும் தத்ரூபமான ஓவியத்தை படைத்தவர் திருமிகு கிருத்திகா ஜோ அவர்கள். இவர் தெற்கு காரோலைனாவில் வசிக்கிறார். ஒரு வங்கியில் கணினி மென்பொருள் துறையில் வேலை பார்க்கும் இவர் ஓவியம் வரைவது, நடனம் ஆடுவது, பாடுவது எனப் பன்முகத் திறனாளர். சார்லட்டில் இயங்கும் "ஓங்கு பறை" என்ற பறைக் குழுவிலும் தன்னுடைய பங்களிப்பை அளித்து வருகிறார்.

திருமிகு மகாலட்சுமி இரமணி

பனிமலர் இதழின் பின் அட்டைப்படத்தில் இடம் பெற்றுள்ள ஓவியத்தை வரைந்தவர் திருமிகு மகாலட்சுமி இரமணி அவர்கள். கான்கார்ட், வட காரோலைனாவில் வசிக்கும் இவர் ஓவியம் உள்ளிட்ட கலை சார்ந்த விடயங்களிலும், கைவினைப் பொருட்கள் செய்வதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஒரு நாட்டின் தொன்மையானக் கலை வடிவங்கள், கட்டிடக் கலை மற்றும் கலைப் பொருட்கள் வடிவமைப்பு யாவற்றையும் ஒருங்கே வெளிப்படுத்துவதாக அமைந்த கோலம் மற்றும் ரங்கோலி போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டுள்ளதாகச் சொல்லும் இவருக்கு, வீட்டிற்கு உள் அலங்காரம் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் உண்டு. கலை உலகம் அளிக்கும் புதிய திறப்புகள் தனக்கு மட்டுமின்றி தன்னை சுற்றி உள்ள அனைவருக்கும் தரும் உற்சாகமும் ஊக்கமும், தான் புதிய கலை வடிவங்களைக் தேடித் தேடி கற்க மிகப்பெரிய காரணியாக அமைவதாக இவர் கூறுகிறார்.

2024

அருவி குழுவினரின் புத்தாண்டு மற்றும்

தமிழர் திருநாள் வாழ்த்துகள்